# பெண்களுக்கு எதிரான வன்முறை: சம்மாந்துறை மலையடிக் கிராமத்தை மையப்படுத்திய ஒரு ஆய்வு

**Fathima Benazir A.W.[77] & Fathima Rizatha M.S.[78]**

**ஆய்வுச் சுருக்கம்**

பெண்களும் ஆண்களும் சமமானவர்கள். தமது உரிமைகளையும் கடமைகளையும் அனுபவிக்கத் தகுதியானவர்கள். ஆனால், அவற்றை விடுத்து இன்று பெண்கள் பல்வேறு வழிகளில் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றனர். அந்தவகையில், சம்மாந்துறையின் மலையடிக்கிராமம் 1, 2, 3, 4 ஆகியவற்றில் 1666 குடும்பங்களையும், 7288 சனத்தொகையையும் கொண்டு காணப்படுகிறது. இவற்றில் 6 வீதமான குடும்பங்களைத் மாதிரியாகத் தெரிவு செய்து 100 வினாக்கொத்துக்கள் கொடுக்கப்பட்டு தகவல் பெறப்பட்டது. பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் இப்பிரதேச பெண்கள் சமூக, பொருளாதார, கலாச்சார குடும்ப போக்கு ரீதியாகவும் அவர்களது ஆற்றல், திறன்கள் முடக்கப்பட்ட நிலையிலும் வன்முறைக்குட்படுத்தப்படுகின்றனர். பெண்களை ஊக்கமளித்து பராமரிக்க வேண்டிய சமூகம் அவற்றை விடுத்து மேம்பாடு, அறிவு, சுகபோக உரிமை, போன்றவற்றில் ஆணாதிக்கப் போக்கு அதிகரித்து பெண்கள் வன்முறைகளும் அதிகரித்துள்ளது. வன்முறையின் வடிவங்களை விளங்காது நாளாந்தம் பெண்கள் பாதிக்கப்பட்டு வருகின்றமை ஆய்வுப் பிரச்சினையாகும். இவ்வாய்வின் நோக்கங்களாக, பெண்களின் வன்முறை வடிவங்களை அடையாளங்கண்டு அவர்கள் எதிர்நோக்கும் சவால்களை வெளிப்படுத்துவதாகவும், இவ்வன்முறைகளில் இருந்து மீள்தீர்வுகளை முன்வைப்பதாகவும் அமைகிறது. இவ்வாய்வின் பிரதான ஆய்வு முறையிலான புள்ளிவிபரவியல், விபரணமுறை, நேர்காணல், வினாக்கொத்து, நேரடி அவதானங்கள், போன்ற 1ம் நிலைத்தரவுகளையும் 2ம் நிலைத்தரவுகளான பொலீஸ் நிலைய, காழி நீதிமன்ற அறிக்கைகள் பயன்படுத்தப்படவிருக்கிறது. இவ்வாய்வினூடாக கண்டுபிடிப்புக்களாக உரிமையியல் ரீதியில் சமூக வாழ்க்கைத்தளங்களான வீடு, குடும்பம், சமூக நிறுவனங்களின் வன்முறைகளைச் சந்திக்கின்றனர். பால்நிலை ரீதியாக ஓரங்கட்டப்பட்டும் பெண்களின் திறமைகள் மழுங்கடிக்கப்பட்டும் ஆண்களையே முன்னுரிமைப்படுத்தல், கணவன் மனைவியை போதைக்கு அடிமையாக்குதல் முறையற்ற பாலியல் வல்லுறவு, அடிப்படை உரிமைகள் தலைமைத்துவம் உயர்கல்வி போன்றன வழங்காமை, பொருளாதாரப் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி மனைவியை அடித்தல், தீர்மானம் எடுத்தலிலும் குடும்ப பொருளாதார சமூக நிலைமைகளிலும் இரண்டாம் நிலைக்கு பெண்களை நோக்குதல், சிறுமியர், பெண்கள் வேலையாட்களாக பயன்படுத்தல் ஆணுக்கான வகிபங்கில் மேலாதிக்கம், வார்த்தை ரீதியான வன்முறைகளும் சொந்தங்களை சந்திக்க விடாமையும் பெண்களின் தேவையை புரியாமையும், உளவியல் ரீதியான பெண்களை வெறுத்தலும், தொழில் ரீதியில் சம்பளக் குறைப்பும் கூடுதல் வேலையும் வன்முறையுடன் ஊழியச் சுரண்டல் என பல்வேறு வன்முறைகளை பெண்கள் சந்திக்கின்றனர் இவ்வகையான வன்முறைகளில் இருந்து மீள உரிமையியல் சமூக கலாசார விடையங்களில் அபிவிருத்தியினை, சட்டங்களைப் பேணுமாறு தூண்டும் பல்வேறு தீர்வுகளை முன்வைப்பதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

**பிரதான சொற்கள்:** காழி, குடி, பெண்கள், வன்முறை

## 1.0 அறிமுகம்.

உலகிலே நாளுக்கு நாள் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. சிறுபான்மையினர் வன்முறைகள், ஆயுத வன்முறைகள், போதைப்பொருள் சார்ந்த வன்முறைகள், இளைஞர்களினால் ஏற்படும் வன்முறைகள் என பல்வேறு வன்முறைகள் அடையாளப்படுத்தப்பட்டு நோக்கப்படுகிறது. உலகில் அதிகமாகப்பாதிக்கப்படும் சமூகக்குழுக்களாக பெண்களே காணப்படுகின்றனர். நாளுக்கு நாள் பெண்கள் வன்முறையானது அதிகரித்துக் கொண்டே வருகிறது. 15-19 வயதிற்கிடைப்பட்ட வயதுப்பிரிவினர் அதிகளவில் வன்முறைகளைச் சந்திக்கின்றனர.( Straus.M.A, 1991)

ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரையும் பரம்பரை பரம்பரையாக பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டு வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். ஒரு சமூகத்தின் அமைதிக்கும் மேன்பாட்டிற்கும் பெண்கள் முக்கியமானவர்கள், அவர்கள் கட்டுப்பாட்டுடனும் வரையறைகளுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்ற விடயம் வரலாற்றில் இருந்து வந்துள்ளதனைக் காணலாம்.

To whom correspondence should be addressed: fathibena123@gmail.com

[77] Undergraduate, Department of Political Science, South Eastern University of Sri Lanka.

[78] Undergraduate, Department of Political Science, South Eastern University of Sri Lanka.

சமூகத்தில் பெணகள் மிகுந்த அவதானத்துடன் வளர்க்கப்பட வேண்டியவர்கள், எனும் கருத்தாக்கத்தின் சிந்தனையினால் அவளது சுதந்திரம், சுதந்திர சிந்தனைகள் அவளது நடமாட்டமும், பிறருடன் பழகும் வாய்ப்பு போன்றவை கட்டுப்படுத்தப்படுகின்றன. இவ்வாறான் கட்டுப்பாடுகள் வரலாற்றில் இடம்பெற்றே வந்திருக்கின்றன. பாரம்பரியமாக ஆண்களால் வீடுகளிலும், தொழில் நிலையங்களிலும், போக்குவரத்தின் போதும் அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார விடயங்கள் அனைத்திலுமே பெண்கள் ஓரங்கட்டப்பட்டு சமூக அந்தஸ்து அற்ற ஓர் ஜடமாகவே நோக்கப்பட்டு வந்தார்கள்.

ஆரம்ப கால கட்டத்தை நோக்கும் போது பெண்கள் ஆண்சமூகத்தால் ஓரங்கட்டப்பட்டிருந்தனர், புறக்கணிக்கப்பட்டிருந்தனர். பெண்கள் வெறுமனே ஆண்களின் உணர்ச்சியைத் தீர்த்து கொள்ளும் ஒரு பொருளாகவே காணப்பட்டனர். 17ம் நூற்றாண்டில் பெண்களும் மனிதர்கள் என்ற நிலையில் நோக்கப்பட வேண்டும். அவர்களும் பாரபட்சமின்றி சகல உரிமைளை பெறவேண்டும். அவர்களும் வன்முறைகளில் இருந்து விடுபட வேண்டும். என்ற கருத்தின் தொடக்கத்தில் இருந்து. பெண் சமத்துவம் பேணல், பெண்கள் தொடர்பான மாநாடுகள், போராட்டங்கள் ஏற்படத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பல கோசங்கள் இடம்பெற்றன. அவை தொடர்பில் வெற்றியும் காணப்பட்டது.

**2.0 பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்படல் ஒரு இலக்கிய நோக்கு**

வன்முறை என்பது ஒரு குற்றவியலாக நோக்கப்படுவதோடு அது உடல் ரீதியான துன்புறுதத்தல்களையும் (அடித்தல், பிடித்துத்தள்ளுதல், வற்புறுத்தித் தள்ளுதல்), பாலியல் ரீதியான துஸ்பிரயோகம், (கட்டாயப்படுத்தி பாலியலில் ஈடுபடல், விருப்பமில்லாத வேளையில் பாலியலில் ஈடுபடுத்தல்), உணர்வு ரீதியானதும், உள ரீதியானதாக ஏற்படுத்தப்படும் நடவடிக்கைகள் வன்முறைகள் எனப்படும்[79]

பெண்கள் வன்முறைக்குட்படுத்தலில் வீட்டு வன்முறையும் காணப்படுகிறது. வீட்டு வன்முறையானது பால்நிலை உறவு ரீதியான துஸ்பிரயோகம், குடும்ப வன்முறை, கணவன் மனைவி முரண்பாடு, துன்புறுத்தல், அடித்தல், தனது சக அங்கத்தவரினால் ஏற்படுத்தப்படும் துஸ்பிரயோகம், போன்ற பெயர்களினால் அழைக்கப்படுகிறது. இது தனிப்பட்ட நடத்தை அல்ல. மாறாக இது கூடுதலாக உடல், உள, பாலியல் ரீதியாக தனது கணவரினால் ஏற்படுத்தப்படும் நடத்தையாகும். மேலும் இது பால்நிலை ரீதியாக சமத்துவமின்மையாகும் எனினும் பெண்கள் உடல் ரீதியான காயங்கள், உளத்தாக்கங்கள், என்பவற்றை கூடுதலாக அனுபவிப்பர். இவ்வாறான நடத்தைகளும், காட்டுமிராண்டித்தனமான நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்ற நடத்தைகளும், தன் மனைவி மீது ஒரு கட்டுப்பாட்டினையும், ஆதிக்கத்தினையும் செலுத்தி தனது சொந்த விடயங்களை பூர்த்தி செய்வதனைக் குறிக்கும். மேலும் ஐக்கிய நாடுகள் பிரகடனத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை என்பதை உறுப்புரை 12 பின்வருமாறு கூறுகின்றது.

1. உடலியல், பாலியல், உளவியல் ரீதியாக குடும்பத்தில் இழைக்கப்படும் வன்முறைகளாகும். மேலும் வீட்டில் பெண் சிறுமிகளை பாலியல் துஸ்பிரயோகப்படுத்துதல், தாக்குதல், திருமண விபச்சாரம், பெண்களுக்கு இழைக்கப்படும் புற பாலுறுப்பு வன்முறைகள், வாழ்க்கைத்துனையல்லாத வன்முறைகள், சுரண்டலுடன் சம்மந்தப்பட்ட வன்முறைகள் ஆகியவை பெண்கள் வன்முறையாக கூறுகின்றது.
2. ஒரு பொதுச்சமுதாயத்தில் நிகழும் உடலியல், பாலியல், உளவியல் ரீதியான வன்முறையாகும். மேலும் கல்வி நிறுவனங்களிலும் ஏனைய இடங்களிலும் வேலை செய்யும் வேளையில் ஏற்படுத்தப்படும் பயமுறுத்தல்கள், பாலியல் தொந்தரவுகள், பாலியல் துஸ்பிரயோகங்கள், பலபந்தமான விபச்சாரங்கள் வன்முறையாகும்

3. உடலியல், பாலியல், உளவியல் ரீதியாக வேறு எங்கேயாவது நிகழும் வன்முறைகளாகும்[80]

பெண்களுக்கு எதிரான வன்முறை என்பதை உடலியல், பாலியல், உளவியல் ரீதியாக பெண்களுக்கு ஏற்படுத்தப்படும் தீங்குகள், துன்புறுத்தல்களாகும் மேலும் பலாத்காரம், ஊடுருவல் மூலம் தனிப்பட்ட பொது வாழ்க்கையில் ஏற்படுத்தப்படும் இழப்புக்கள் பெண்களுக்கு எதிரான வன்முறை எனக்கூறுகின்றது .இன்று உலக நாடுகளில் பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரித்து வருகின்றது. (Ibid)

பெண்கள் தொடர்பில் இன்று பல நிறுவனங்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. 1998ஆம் ஆண்டு பெண்ணுரிமைக் கண்காணிப்பு நிலைய ஆய்வில் 229 சம்பவங்களில் 45 சம்பவங்கள் வன்முறையின் மூலமாக இடம்பெற்றுள்ளன. மேலும் இன்று பெண்ணுரிமைகள் தொடர்பில் பத்திரிகைச் செய்திகளும் அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன. இன்றும் உலக நாடுகளில் ஆண்-பெண் வன்முறைகள் அதிகரித்து வருகின்றனர். அதாவது ஆண் மூலமாக பெண்ணுக்கு உண்டான வன்முறைகள் 41% என அறியப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி உலகில் பெண்களுக்கு உதவி வழங்கும் நிறுவன ஆய்வின்படி 59% ஆயுதம் மூலமாக வன்முறை இடம்பெறுவதாகவும் 41% சாதாரண சம்பவங்கள் நிகழ்வுகள் மூலமாக இடம்பெறுவதாக கூறுகின்றன. இன்று உலகில் பல்வேறு நாடுகளிலும் இது தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றன. அதேபோல் CENTER FOR DISEASE CONTROL எனும் அறிக்கையின் படி 32 மில்லியன் அமெரிக்க மக்கள் (10%) வீட்டு வன்முறைக்கு உற்படுகின்றனர் என T. Jarden Thoennes என்பவர் கூறுகின்றார் .

அதே போன்று கனடா, நோர்வே போன்ற நாடுகளிலும் வன்முறை தொடர்பில் பல சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் புள்ளி விபரங்களும் பதிவாகியுள்ளன. இங்குள்ள பல வன்முறைச்சம்பவங்களுக்கு அந்தந்த நாடுகளில் உள்ள கலாச்சாரங்களே காரணமாகும். உதாரணமாக பிரான்ஸில் டிஸ்கோ கலாச்சாரம் காணப்படுகின்றது. இந்தக் கலாச்சாரத்தின் மூலமாக பெண்களை மது போதையில் ஆழ்த்தி பல வன்முறைச் சம்பவங்களை ஏற்படுத்தி இருக்கின்றமையை அண்மைக் காலங்களில் அறியக் கூடியதாய் உள்ளது. இவ்வாறு மதுவுக்கு உட்படுத்தி அதே போன்று கனடா, நோர்வே, நியுசிலாந்து, தெதர்லாந்து போன்ற நாடுகளில் பிள்ளைப்பருவத்திலேயே ⅓ பகுதியனர் ஏதோ ஒரு வகையில் வல்லுறவுக்கு உட்படத்தப்படுகின்றனர்.

உலக சுகாதார நிறுவன அறிக்கையின் படி 6:1 குடும்ப வன்முறையால் அவஸ்தைப்படுகின்றனர் இதில் 18 வினாடிக்கு ஒரு தடவை உலகின் எங்கே ஓரிடத்தில் பெண் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறாள். அதிலும் தென்னாசிய நாட்டுப்பெண்களே கூடுதலாக பாதிக்கப்படுகின்றனர். பெண்கள் நெருங்கிய உறவினர்களால் உடல், உளரீதியாக வன்முறைகளை உள்வாங்கிக் கொள்கின்றனர்.[81] மேலும் இந்தியாவில் ஒவ்வொரு 53 நிமிடமும் ஒரு பெண் வன்புனர்ச்சிக்கு உள்ளாக்கப்படுகின்றாள். ஓவ்வொரு 7 வது நிமிடத்திலும் பெண்கள்மீது வன்முறை செலுத்தப்படுகின்றது. நாளொன்றுக்கு தற்கொலை செய்து கொள்ளும் குடும்பப் பெண்களின் எண்ணிக்கை 53 ஆகும் குடும்ப சித்தரவதை, மற்றும் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாகும் பெண்களின் எண்ணிக்கை 1:2 ஆக காணப்படுகின்றது.[82]

பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது எந்த ஒரு நாட்டிலும் மட்டுப்படுத்த படவில்லை. இதன் மூலம் சமுதாயத்தின் அபிவிருத்தி மற்றும் ஏனைய தனிப்பட்ட, பொதுவாழ்வில் பெண்களுக்கு எதிரான பாரபட்சம், அடக்குமுறைகள் என்பன மரபு ரீதியாக பின்பற்றப்பட்டே வருகின்றது. அத்தோடு தடைசெய்யபட்ட பாலுறவு, அடித்தல், பெண்கள் மீது பலாத்காரம் புரிதல் என்பனவும் சர்வசாதாரணமாகவே கடைப்பிக்கப்படுகின்றது. ஆபிரிக்காவைப் பொறுத்தவரை சில சமூகங்களில் பெண் குறியின் உணர்ச்சி

மென்சவ்வை வெட்டுதல், இந்தியாவில் சீதனக் கொடுமை என வன்முறைகள் பெண்களுக்கு எதிராக நீண்டு கொண்டே செல்கிறது.[83]

சீடா சமவாயத்தில் உறுப்புரை 3ல்

"பெண்களுக்கெதிரான பாரபட்சம் என்பதன் கருத்து திருமணமான மற்றும் திருமணமாகாத பெண்கள் அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார, சிவில் அல்லது வேறு ஏதாவது துறையில் ஆண்,பெண் சமத்துவம் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரம் என்னும் அடிப்படையில் அவர்களின் அங்கீகாரம், அனுபவம் அல்லது விளைவுடன் அல்லது பால் அடிப்படையில் இடம் பெறும் ஏதாவது வேறுபாடு, வெளியேற்றம் அல்லது கட்டுப்பாடு ஆகும்." எனக்கூறுகின்றது.

மேலும் இலங்கை ஜனநாயக சோசலீசக்குடியரசின் அரசியலமைப்பில் அத்தியாயம் 03 இல் அடிப்படை உரிமைகள் 12(2) இல் பின்வருமாறு சமத்துவத்திற்கான உரிமையை எடுத்துக்காட்டுகின்றது

"இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்தப்பிரசைக்கும் ஓரங்காட்டுதல் ஆகாது" எனக்கூறுகின்றது.

**3.0 ஆய்வுப் பிரச்சினை**

ஆண், பெண் என்று சமூகத்தில் பேசப்பட்டு வந்தாலும் ஆண்களைப்போல் பெண்கள் சமூக, பொருளாதார, குடும்ப, அமைப்பில் சுதந்திரங்களைப்பெறாது ஆணாதிக்கப்போக்கு அதிகரித்து பெண்கள் கூடுதலாக உரிமையியல், குடும்ப, தொழில், சமூக, கலாச்சார ரீதியில் வன்முறைக்குட்படுத்தப்படுகின்றனர். வன்முறையினால் பாதிக்கப்பட்டோர் விகிதமும் அதிகரித்து காணப்படுகிறது. வன்முறையின் வடிவங்களை விளங்காது நாளாந்தம் பெண்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஆய்வுப்பிரதேசமான மலையடிக்கிராமம் 1,2,3,4 ஆகிய பிரதேசங்களில் பெண்கள் வன்முறையானது அதிகரித்துக் காணப்படுகிறது இதனால் இவ்வன்முறைக்கான காரணங்கள் என்ன?, இவ்வன்முறையின் விளைவுகள் எவ்வாறு காணப்படுகிறது என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**4.0 ஆய்வின் நோக்கங்கள்**

இவ்வாய்வின் பிரதான நோக்கங்களாக

- ஆய்வுப்பிரதேசத்தில் பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்படுவதற்கான காரணிகளை அடையாளம் காணல்.
- பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்படும் வடிவங்களை அடையாளம் கண்டு விளக்குதல்.
- பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்படுவதினால் ஏற்படும் தாக்கங்களையும், பாதிப்புக்களையும் அடையாளம் கண்டு விளக்குதல்.
- பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்படுவதனைத் தடுக்கும் பல்வேறு நடவடிக்கைகளை, பரிந்துரைகளை முன்வைத்தல்.

**5.0 ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு முறையானது புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு மற்றும் விபரணமுறைகறைகளையும் முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளைக்கொண்டு தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

முதலாம் நிலைத்தரவுகளாக வினாக்கொத்து, முக்கிய நபர்களை நேர்காணுதல், குழு கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல் , நேரடி அவதானங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. மலையடிக்கிராமத்தில் 1666 குடும்பங்களையும், 7288 சனத்தொகையையும் கொண்டு காணப்படுகிறது.

இவற்றில் 6 வீதமான குடும்பங்களைத் எழுமாறாக தெரிவு செய்து 100 வினாக்கொத்துக்கள் கொடுக்கப்பட்டு தகவல் பெறப்பட்டது.

இரண்டாம் நிலைத்தரவுகளாக கல்வியியல் ஆய்வுகள், புத்தகங்கள், சஞ்சிகைகள், அரசினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள், பிரதேச செயலக, காழி நீதிமன்ற, பொலிஸ் நிலைய அறிக்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவனை 5.1 மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் வினாக்கொத்து விபரம்.**


| கிராம சேவகர் பிரிவு | மொத்த குடும்பங்கள் | சதவீதம்(%) | மாதிரி |
|---|---|---|---|
| மலையடிக்கிராமம்-01 | 441 | 26.47 | 26 |
| மலையடிக்கிராமம்-02 | 562 | 33.73 | 34 |
| மலையடிக்கிராமம்-03 | 398 | 23.88 | 24 |
| மலையடிக்கிராமம்-04 | 265 | 15.90 | 16 |
| **மொத்தம்** | **1666** | **100.00** | **100** |

மேலும் முதலாம் நிலைத்தரவுகளில் பின்வரும் நோக்கமாதிரியடிப்படையில் நேர்காணளினூடாக தகவல்கள் பெறப்பட்டுள்ளன.
மதத்தலைவர்கள் -02
கிராம சேவகர்- 02
வன்முறைக்குள்ளாகிய பெண்கள்- 04
சமூக சேவகர்கள்- 04
பெண் சங்கங்கள் - 02
இங்கு முதலாம் நிலைத்தரவுகள் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**6.0 ஆய்வுப்பிரதேசம்.**

அம்பாறை மாவட்டத்தில் 20 பிரதேச செயலகப்பிரிவுகளில் ஒன்றான சம்மாந்துறை மிகக்கூடுதலான மக்கள் தொகையையும் அதிக நிலப்பரப்பையும் உள்ளடக்கியதாகும். சம்மாந்துறை தனியான ஒரு பிரதேச செயலகமாக தற்போது 51 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி 21 கிராமங்களுடன் 132.79 சதுரகிலோமீற்றர் பரப்பை எல்லையாகக் கொண்டு 64696 சனத்தொகையையும் கொண்டு அமைந்துள்ளது. அவற்றில் மலையடிக்கிராமமானது 1666 குடும்பங்களையும் 7288 மொத்த சனத்தொகையையும் கொண்டுள்ளது. பின்வரும் வரைபடமானது ஆய்வுப்பிரதேசத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 6.1 சம்மாந்துறையின் எல்லைகளைக்குறிக்கும் வரைபடம்**




| பிரதேச செயலாளர் பிரிவு | 2014 | | 2015 | | 2016 | | நிலப்பகுதி |
|---|---|---|---|---|---|---|---|
| | சனத்தொகை | அடர்த்தி | சனத்தொகை | அடர்த்தி | சனத்தொகை | அடர்த்தி | சது.கிமீ |
| மலையடிக்கிராமம்-01 | 1257 | 3928.13 | 1264 | 3950.00 | 1640 | 5125.00 | 0.32 |
| மலையடிக்கிராமம்-02 | 2188 | 6837.5 | 2203 | 6884.38 | 2996 | 9362.5 | 0.32 |
| மலையடிக்கிராமம்-03 | 1498 | 4681.25 | 1506 | 4706.25 | 1535 | 4796.88 | 0.32 |
| மலையடிக்கிராமம்-04 | 901 | 2815.625 | 915 | 2859.38 | 1117 | 3490.63 | 0.32 |

(மூலம் : திட்டமிடல் பிரிவு, பிரதேச செயலகம், சம்மாந்துறை- 2016)

**அட்டவணை 6.1 ஆய்வுப்பிரதேச சனத்தொகை**

மேலும் மலையடிக்கிராமத்தில் பெண்கள் சனத்தொகைப்போக்கினை நோக்கும்போது பெண்களின சனத்தொகையானது ஆண்களின் சனத்தொகைப்போக்கினை விட அதிகரித்துக் கொண்டே வருகிறது

| கிராம சேவகர் பிரிவு | மொத்த குடும்பங்கள் | மொத்த சனத்தொகை | ஆண் | பெண் |
|---|---|---|---|---|
| மலையடிக்கிராமம்-01 | 441 | 1640 | 760 | 880 |
| மலையடிக்கிராமம்-02 | 562 | 2996 | 1420 | 1576 |
| மலையடிக்கிராமம்-03 | 398 | 1535 | 743 | 792 |
| மலையடிக்கிராமம்-04 | 265 | 1117 | 548 | 569 |
| **மொத்தம்** | **1666** | **7228** | **3471** | **3817** |

(மூலம் : திட்டமிடல் பிரிவு, பிரதேச செயலகம், சம்மாந்துறை- 2016)

## 7.0 ஆய்வின் வரையறை

இது சம்மாந்துறையின் மலையடிக்கிராமத்தின் 1,2,3,4 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை மட்டும் மையமாகக்கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வு சம்மாந்துறைபிரதேசத்தில் குறிப்பாக

முஸ்லிம் சமூகத்தை மையப்படுத்தி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. சம்மாந்துறையானது மத விடயங்களில் இறுக்கமான போக்கு இருப்பதனால் இவ்வாறான பெண்கள் தொடர்பாக பேசப்படும் விடயங்களில் தகவல்களைப்பெறுவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.சில கிராம சேவகர் பிரிவுகளில் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக முறைப்படுத்தப்பட்ட பேட்டிகள் இடம் பெற்றாலும் பாதிக்கப்பட்ட பெண்களை அடையாளங்கண்டு தகவல்களை பெறுவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. சில பாதிக்கப்பட்ட பெண்கள் தகவல்களைச் சொல்வதில் தயக்கம் காட்டுகின்றனர்.

## 8.0 ஆய்வின் முடிவுகள்

### 8.1 வன்முறைக்குட்படுத்தப்படும் காரணிகளைக் காட்டும் புள்ளிவிபரம்

இவ்வாய்வினூடாக பொதுவான கண்டுபிடிப்புக்களாக 100 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டன. அவற்றில் 72 வினாக்கொத்துக்கள் கிடைக்கப்பெற்றன. அவற்றினூடாக அடையாளங்காணப்பட்ட புள்ளிவிபரங்களாக

**அட்டவணை: 8 .1 ஆய்வுப்பிரதேசத்தில் வினாக்கொத்தினூடாக அடையாளங்காணப்பட்ட கல்வி நிலை**

| | **கல்வி நிலை** | **வீதம்** |
|---|---|---|
| பெண்கள் | பாடசாலை செல்லாமை | 17 |
| | 1-5 ஆண்டு வரை | 39 |
| | 5-11 ஆண்டு வரை | 8 |
| | பல்கலைக்கழகம் | 4 |
| ஆண்கள் | பாடசாலை செல்லாமை | 3 |
| | 1-5 ஆண்டு வரை | 21 |
| | 5-11 ஆண்டு வரை | 5 |
| | பல்கலைக்கழகம் | 3 |
| | மொத்தம் | 100% |

வினாக்கொத்தினூடாக இங்கு திருமணம் முடித்த 87 வீதமானவர்களிடமும் திருமணம் முடியாத 13 வீதமானவர்களிடமும் ஆய்வு செய்யப்பட்டது. ஆவற்றில் கணவனின் தொழில் சாதாரண கூலித்தொழிலை உடையவர்களிடம் அதிகமான பிரச்சினைகள் அடையாங்காணப்பட்டன.

வன்முறைக்குட்படுத்தப்படுவதற்காக காரணிகளை நோக்கும்போது பின்வரும் அடிப்படையில் ஆய்வினுடைய கண்டுபிடிப்புக்கள் அமைந்தன.

**அட்டவணை: 8.2 ஆய்வுப்பிரதேசத்தில் வினாக்கொத்தினூடாக அடையாளங்காணப்பட்ட வன்முறைக்குட்படுத்தப்படுவதற்காக காரணிகள்**

| | **பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்டுவதற்கான காரணிகள்** | **பதிலளித்தோர் வீதம்** |
|---|---|---|
| பொருளாதாரக் காரணிகள் | வறுமையும் தொழில்வாய்ப்பின்மையும் | 90 |
| | சீதனமும் அதுசார்ந்த பொருளாதார பிரச்சினையும | 70 |
| | வெளிநாட்டு வேலைவாய்ப்பும் மோகமும். | 51 |
| | வேறு | 12 |
| சமூகக் காரணிகள் | சமூகக்கட்டமைப்பு | 57 |
| | சமூக நிறுவனங்களில் காணப்படும் குறைபாடு.`. போதாமை | 42 |
| | பெற்றோர் முரண்பாடும் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்ளாமை | 39 |
| | கணவனின் கெட்ட பழக்கம் | 21 |
| | பெற்றோர் பிரிந்து வாழ்தல் | 33 |
| | புழமைவாதம | 09 |
| | வேறு | 11 |
| கலாச்சாரக் காரணிகள் | இன குல ரீதியான வேறுபாடுகள் | 35 |
| | ஏனையவை | 11 |

## 9.0 வன்முறைக்குட்படுத்தப்படுவதற்கான காரணிகள்

### 9.1.0 பொருளாதாரக்காரணி

### 9.1.1 வறுமையும் தொழில்வாய்ப்பின்மையும்

இன்று உலக நாடுகளில் தலையிடியாக வறுமை தலைநிமிர்ந்து நிற்கிறது வறுமை என்பது மனிதனின் அத்தியவசியத்தேவைகளான உணவு, உடை,உறையுள் ஆகியவற்றை பெற்றுக்கொள்ள முடியாத நிலை வறுமையாகும் [84] இலங்கையின் 23% இன்னும் வறுமையிலேயே வாடுகின்றனர் இவ்வாய்வுப்பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் அதிகமானவர்கள் விவசாயம் சார்ந்த தொழிலைச் செய்கின்றனர். வியாபாரம் குறைவாகவும், கல்லுடைத்தல், கூலிவேலைக்கு செல்லுதல், நெல்குற்றி விற்றல், மாஅரைத்துக் கொடுத்தல், சிறிய இயந்திரங்களை வைத்து தமது பொருளாதார தேடலை நடாத்துகின்றனர். ஏனைய பிரதேசத்து மக்களைவிட இயல்பிலேயே குறைந்த வருமானத்தையும் அடிப்படை வசதிகள் இன்னும் சரியான முறையில் காணப்படாத பிரதேசமாக காணப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் வறியவர்களின் நிலையை எடுத்து நோக்கும்போது அதிகமானோர் சமுர்த்தி பெறுபவர்பவர்களாக உள்ளனர்.

**அட்டவணை 9.1 ஆய்வுப்பிரதேசத்தில் சமுர்த்தி பெறும் குடும்பங்கள்**

| கிராம சேவகர் பிரிவு | குடும்பங்களின் எண்ணிக்கை | உதவி பெறும் குடும்பங்களின் தொகை | சமுர்த்தி உதவி பெறும் தொகை | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | Rs. 615 | Rs. 415 | Rs. 350 | Rs. 250 | Rs. 155 |
| மலையடிக்கிராமம்-01 | 441 | 272 | 94 | 81 | 16 | 25 | 56 |
| மலையடிக்கிராமம்-02 | 562 | 276 | 104 | 91 | 4 | 28 | 49 |
| மலையடிக்கிராமம்-03 | 398 | 241 | 87 | 78 | 2 | 29 | 45 |
| மலையடிக்கிராமம்-04 | 265 | 152 | 35 | 70 | 5 | 15 | 27 |
| **மொத்தம்** | **1666** | **941** | **320** | **320** | **27** | **97** | **177** |

இவ்வட்டவணையை நோக்கும் போது சம்மாந்துறையில் இப்பிரதேசத்திலேயே அதிகமானோர் சமூர்த்தி பெறுகின்றனர் என்றாலும் ஒப்பீட்டளவில் முழு வறுமையுடனும், சார்பு வறுமையுடனும் வாழ்கின்றனர். பெற்றோர் தமது குழந்தைகளைச் சரியான முறையில் வளர்க்கமுடியாமல் திண்டாடுகின்றனர். தமது வறுமையின் நிமித்தம் சிறுவர் தொழிளாளர்கள் இப்பிரதேசத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றனர்.

பொருளாதார தேடலில் பின்தங்கியுள்ள இக்கிராமம் ஆண்கள் மட்டும் உழைத்து வாழ முடியாமல் பெண்களும் உழைக்கின்றனர். மேலும் இம்மலையடிக்கிராமத்தில் குறிப்பிட்ட சில காலங்களிலேயே தொழில்களை மேற்கொள்ளக்கூடிய நிலை காணப்படுவதால் ஏனைய காலங்களில் தொழில் பெற முடியாமல் சார்பு வறுமையில் இருந்து முழுவறுமைக்கு உள்ளாகின்றனர். இவ்வறுமை ஏனைய சமூகத்தளங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இங்கு வறுமை இங்கு 90% காணப்படுகின்றது இவைதவிர ஏனைய பிரச்சினைகளையும் கொண்ட பிரதேசமாகவும் காணப்படுகின்றது.

இப்பிரதேசமானது அபிவிருத்தியின்மை, பொருளாதாரவசதியின்மை, தொழில்வாய்ப்பின்மை, முதலீடுகள் குறைவு, வெளிநாட்டுப்பணத்தை நம்பி இருத்தல்,பழைமைவாதத்தை பின்பற்றல் போன்றவை காணப்படுகின்றது. வறுமையில் வாழும் குடும்பங்கள் தமது தேவையை நிறைவு செய்ய முடியாத வேளை ஏனையோரை சுரண்டுகின்றனர். பொருளாதாரப்பிரச்சினையால் கணவன் மனைவியை பல்வேறு

காரணங்களைக்கூறி வன்முறைகளையும் பிரச்சினைகளையம் தூண்டுகின்றான். இங்கு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதனால் அதிகமானோர் சமூக நிகழ்வுகள் தெரியாதவர்களாக உள்ளனர்.

### 9.1.2 சீதனமும் அதுசார்ந்த பொருளாதார பிரச்சினையும்

ஆண்கள், படித்தவராக ,தொழில் செய்பவராக இருந்தால் பெண்வீட்டார் (சீதனம்) வரதட்சனை கொடுத்து தமது பிள்ளைகளுக்கு திருமணம் முடிக்கின்றனர். இயற்கையிலேயே இப்பிரதேசம் கல்வியில் பின்தங்கிய பிரதேசமாக காணப்படுவதனால் பெண்கள் கல்வி கற்பது குறைவாக காணப்படுகின்றது. பெண் பருவ வயதை அடைந்தவுடன் திருமணம் முடிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் இளவயதுத் திருமணம் அதிகரிக்கின்றது. சிலர் பெண் பிள்ளைகளை கல்வி கற்க வைப்பதில் ஆர்வம் செலுத்தாமல் கல்வியில் இருந்து இடைவிலக்குகின்றனர் 6-10 ஆம் ஆண்டு வரையான கல்வியே பெண்களுக்கு கொடுக்கப்படுகிறது. இதற்குப் பிரதான காரணம் சீதன நடைமுறையாகும் பெண்கள் கல்வி கற்றால் அதற்கு ஏற்றாப்போல் மாப்பிள்ளை தேடவேண்டும் என்ற சமூக வழமை காணப்படுவதனால் தமது பிள்ளைகளின் கல்வியை விட்டு இடைநிறுத்தி விடுகின்றனர.

சம்மாந்துறைப்பிரதேசங்களில் நிலம் வாங்குவதை விட இப்பிரதேசத்தில் நிலத்தைப் பெறுவது இலாபகரமாக இருந்தது. சம்மாந்துறையில் சீதனம் அதிகரித்த நிலையில் காணப்படுவதனால் அதிக குழந்தையுடையவர்கள் தமது பிள்ளைகளின் நலன் கருதி இப்பிரதேசத்தில் நிலங்களை வாங்குகின்றனர். ஆனால் தமது பிள்ளைகளின் கல்வியை கணக்கிலெடுக்காத பெற்றோரும் காணப்படுகின்றனர். அதேவேளை தமது சுமையை போக்குவதற்காக இளவயதிலேயே திருமணத்தை முடித்து காலப்போக்கில் விவாகரத்தாக மாறிய நிகழ்வுகள் காணப்படுகின்றன. சில குடும்பங்களில் சீதனம் தருவதாக கூறி அதனை கொடுக்க தவறும் பட்சத்தில் கணவன் மணைவியிடையே முரண்பாடுகளும் மோதல்களும் இடம் பெற்று வருகின்றமையை அவதானிக்க முடிகிறது.

மேலும் சொத்துப்பிரிக்கும் போது மூத்த பிள்ளைக்கு கூடுதலான சொத்துக்களும் இளைய பிள்ளைக்கு குறைந்நதளவான சொத்துக்களும், கொடுக்கும் போது அங்கு முரண்பாடுகள் கணவன் மனைவியிடையே ஏற்படுகின்றன. இது குறிப்பாக மூத்த பிளளைக்கு குறைவான சீதனமும், இழைய பிள்ளைக்கு கூடுதலான சீதனமும் கொடுப்பதனால் மூத்த பிள்ளை பெற்றோருடன் முரண்பட்டுக் கொள்கிறது. சில வேளை கணவனினால் தகாத வார்த்தைப்பிரயோகங்களை பயன்படுத்தும் சந்தர்ப்பங்களையும் அவதானிக்க முடிகிறது. மேலும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு முறையான சொத்துப்பங்கீட்டை கொடுக்காமல் மரணிப்பதால் பிள்ளைகளிடத்தில் மேலும் மேலும் முரண்பாடுகள் தோற்றம் பெற்று கணவன் மனைவிடையே சொத்தை மையப்படுத்திய பிரச்சினையாக மாற்றமடைந்து வருகிறது.

### 9.1.3 பெற்றோர் வெளிநாட்டு வேலைவாய்ப்பும் மோகமும்.

குடும்பத்திலுள்ள வறுமை காரணமாக கணவன், மனைவி வெளிநாடு செல்கின்றனர். குறிப்பாக வறுமை காரணமாகவும், தமது குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்பதற்காகவும் வெளிநாடு செல்கின்றனர். இந்நிலையை எடுத்து நோக்கும்போது

**அட்டணை 9.2 வெள்நாட்டு வேலை வாய்ப்புக்காக சென்றோர்**

| கிராம சேவை பிரிவு | மொத்தக்குடும்பங்கள் | வெளிநாடு சென்றோர் எண்ணிக்கை |
|---|---|---|
| மலையடிக்கிராமம் - 01 | 441 | 38 |
| மலையடிக்கிராமம் - 02 | 562 | 65 |
| மலையடிக்கிராமம் - 03 | 398 | 41 |
| மலையடிக்கிராமம் - 04 | 265 | 68 |

(மூலம் கிராம நிலதாரிகள்)

குறிப்பிட்ட கணவன் வெளிநாடு செல்கின்றபோது பின்வரும் அடிப்படையில் மனைவி பாதிக்கப்படுகின்றாள்

- நீண்ட காலம் மனைவியுடன் தொடர்பின்றி இருத்தல்
- பெண்கள் வேறு ஒருவருடன் தொடர்பு வைத்துக்கொண்டு அதன் பின்னர் கைவிடல் அல்லது அவனோடு வாழ்தல்
- கணவன் கவனிப்பாரற்ற நிலையில் அல்லது வெளிநாடு சென்ற குடும்பங்களில் பெண் பிள்ளைகள் வேறு ஒருவருடன் தொடர்பை வைத்துக் கொண்டு பின்னர் அவனால் கைவிடப்படல்

சில அதிக குழந்தைகளையுடைய குடும்பத்தில் வெளிநாடு சென்று சொல்லன்னாத்துயரத்தை அனுபவித்து பின்னர் தமது வாழ்க்கையையே நாசமாக்கிய குடும்பங்களையும் காணக்கூடியதாய் உள்ளது.

**9.2.0 சமூகக் காரணி**

**9.2.1 சமூகக்கட்டமைப்பு**

சம்மாந்துறையினது பல்வேறு இனமுரண்பாட்டுக்காரணிகளால் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும் 1989 ம் ஆண்டு தமிழ்-முஸ்லிம் இனக்கலவரத்தின் பின்னர் இப்பிரதேச எல்லையோர மக்கள் இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் குடியேறியேறினர். அவர்களில் சிலர் இம்மலையடிக்கிராமத்தில் குடியேறினர். இப்பிரதேசத்தில் அடிப்படை கட்டுமான வசதிகள் குறைவாக காணப்படுவதனால் அங்கு வன்முறைகள் சாதாரனமாக இடம் பெறுகின்றது. கூட்டுக் குடும்ப அமைப்பை விட தனிக்குடும்ப அமைப்பு அதிகம் காணப்படுகின்றது. கிராமிய பண்பும், பழமைவாதமும், நவீனத்துவத்தைகொண்டிராத சமூகமாகவும் இருப்பதால் இங்கு பெண்கள் தொடர்பில் கவனம் குறைவாக காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் சமூக மட்டத்தில் அல்லது குடும்ப மட்டத்தில் பிரச்சினைகள் ஏற்படும்பொழுது ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்காது தான் செய்வது சரி என்ற போக்கினை கடைப்பிடிக்கின்றனர் இதனால் சாதாரண பேசித்தீர்க்கக்கூடிய விடையங்கள் நீதிமன்றம் வரை செல்கிறது இதற்கு முறையற்ற சமூகமயமாக்கம் காரணமாகும்.

**9.2.2 சமூக நிறுவனங்களில் காணப்படும் குறைபாடு போதாமை**

பொதுவாக சமூக நிறுவனங்களில் குடும்பத்தை எடுத்துப்பார்த்தால் பெற்றோர்களிடையே காணப்படும் முரண்பாடுகள் காலப்போக்கில் வன்முறையாக வெடிக்கின்றன. வறுமை, அதிக குழந்தைகள், அளவுக்கதிமான செலவுகள், பெற்றோர்களிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், பாலியல் திருப்தியின்மை, இருவருக்கும் வேலைக்குச்செல்லுதல், திட்டவட்டமான குறிக்கோள் இல்லாமை, எந்த வேலையையும் கூட்டாக செய்யமுடியாமை, குடும்பத்திற்குத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளாமை, சமுதாய, தான் விரும்பிய செயற்பாடுகளுக்கே முக்கியத்துவம் கொடுத்தல் போன்றவற்றினால் பெற்றோர் முரண்பட்டுக் கொள்கின்றனர். இதனால் அங்கு பெண்களே கூடுதலாக பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறான முரண்பாடு தொடர்பில் இப்பிரதேச கிராம நிலதாரிகளிடம் வினவியபோது பெற்றோர்களிடத்தில் கல்வியின்மை காரணமாக முரண்பாடுகள் தோன்றுகின்றன. அது காலப்போக்கில் பிள்ளைகளைப்பாதிக்கின்றன். பருவ வயதையடைந்த பெண் பிள்ளைகள் பெற்றோர் முரண்பட்டுக் கொண்டிருக்கும் அதனை தடுத்து நிறுத்த தயங்குகின்றனர். 2008 ம் ஆண்டு டிசம்பர் வரை சம்மாந்துறையில் 49 திருமணங்கள் மணவிலக்கு பெற்றுள்ளன இவற்றுள்ள 32 குடும்பங்கள் ஆய்வுப்பிரதேசத்தில் இருப்பதனைக் காணலாம்.(காழி)

இப்பிரதேசதத்தின் தொழில் நிலமையும் தொழில் தளத்தினையும் நோக்கும் போது விவசாயம், மந்தை மேய்ப்பு, வியாபாரம், செங்கள் உற்பத்தி, கருங்கல் உடைத்தல், மந்தை வளர்த்தல், வலைபின்னுதல், துவிச்சக்கரவண்டி திருத்தல், மீன் வியாபாரம் போன்றவற்றில் ஈடுபடுவோர் சிலர் தமது களைப்பினைத் தீர்ப்பதற்காக மது போதையை பாவிக்கின்றனர் சம்மாந்துறையில் 10 மேற்பட்ட மதுச்சாலைகள் காணப்படுகின்றன. அவற்றில் மது அருந்துவர்களின் வீதத்தினை நோக்கும் போது அதிகமானோர்

இஸ்லாமிய மதத்தை சார்ந்த பின்தங்கிய பகுதிகளில் உள்ள படிப்பறிவற்ற மக்களாகவே இருக்கின்றனர்.(பொலிஸ்)

அத்துடன் ஏனைய தொடர்பு சாதனங்கள் கூட வன்முறைகளைத்தூண்டுகின்றன. கிராமிய சமூக அமைப்பும் கல்வியறிவு குறைவாக உள்ளமையும், இலத்திரனியல் ஊடகங்களின் தொழிற்பாடு அதிகமாகவுள்ளமையும், நீலத்திரைப்படங்கள், ஆபாச காட்சிகள் இறுவட்டக்கள் மூலம் இரகசியமாக விற்கப்படுகின்றமையும் பெண்கள் வன்முறைகளைச்சந்திப்பதற்குக் காரணமாகும். இவைதவிர திருமண வயது மிகவும் குறைவான நிலமையிலே பெற்றோர் திருமணம் முடித்து வைப்பதனால் திருமணத்தின், குடும்பத்தின்தாற்பெரியங்களை விளங்காத பல தம்பதிகள் விவாகரத்துப் பெற்றள்ளனர். விவாகரத்து பெற்றோர்வீதம் இவ்வாய்வுப் பிரதேசத்திலேயே அதிகமாக காணப்படுகின்றது.

**9.2.4 கணவனின் கெட்ட பழக்கமும் பெற்றோர் பிரிந்து வாழ்தலும்**

இப்பிரதேசத்தில் அதிகமானோர் விவசாயம் சார்ந்த தொழிலையும் கல்லுடைத்தல், மீன்வியாபாரம் செய்தல் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். தமது தொழில் முடிந்ததன் பின் சிலர் கெட்ட பழக்கத்திற்கு உள்ளாகின்றனர் சிலர் மது அருந்துதல், கஞ்சா, ஏனைய கெட்ட பழக்கங்களிலும் ஈடுபடுகின்றனர். இப்பிரதேச சமூக வழமை சிறுவயதினர் பெரியோரின் செயற்பாட்டினை மேற்கொள்கின்றனர் கெட்ட பழக்கத்தினைதொடர்ந்து செய்யும் போது அதற்கே அடிமையாகி விடுகின்றனர். திருமணம் முடித்த குடும்பங்களில், கணவனின் இவ்வாறான கெட்ட பழக்கங்கள் பெண்கள் வன்முறைக்குட்படக் காரணமாகும். மேலும் அதிகமானோர்வெளிநாட்டுக்கு தொழில் நோக்கமாக இடம் பெயருகின்றனர் பல வருடங்களாக மனைவியுடன் தொடர்பின்றி காணப்படுகின்றர் சிலர் வெளிநாட்டிலே வேறு திருமணங்களையும் முடித்து தனது ஆரம்ப மனைவியை கைவிடுகின்றனர் இதனால் இங்கு அதிகமானோர்பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பெற்றோர் தங்களிடையே முரண்பட்டுக்கொள்வதினால் சில வேளை பிரிந்து வாழ்கின்றனர். இது தொடர்ச்சியாக நிகழும்பொழுது பெண்கள் மிக அதிகமாக பாதிக்கப்படுகின்றனர்.

**9.3.0 கலாச்சாரக் காரணிகள்.**

இப்பிரதேசத்தில் கலாச்சாரம் என்ற போர்வையில் ஆதிக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஆண் பெண்ணுக்கு பணி செய்ய வெண்டும் என்ற சமூக வழமையும் மனப்போக்கும், மதம் இறுக்கமானது என்ற கொள்கைகளும் காணப்படுகின்றன. மதத்தில் நம்பிக்கை கொள்ளாத குடும்பங்கள் மதத்தை விமர்சிக்கின்றனர். பெண் மதத்தினை பின்பற்ற முனைந்தாலும் தனது மதச்சார்பின்மை ஆதிக்கதினை நுழைக்கும் போது பெண் இயல்பாகவே அடிப்படை மதச்சுதந்திரத்தினை இழந்து தாக்கங்களை உள்வாங்குகின்றாள்.

மேலும் இப்பிரதேசததில் பால்நிலை ரீதியில் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை நோக்கும்போது, பெண்ணின் அடையாளங்கள் இன, குல, குடி[*] ரீதியல் காணப்படுவதனால் சமூக நோக்கு, சமூக அந்தஸ்தில் குடியினை அல்லது குலத்தினை விமர்சிக்கும் பண்பு இப்பிரதேச ஆண்களிடத்தில் காணப்படுகின்றது. இதனால் இயல்பிலேயே பெண்கள் வன்முறைக்குட்படுகின்றனர்.

மேலும் 1989ம் ஆண்டைய இனமுரண்பாட்டின் பின்னர்தான் இவ் மலையடிக்கிராமத்தில் குடியிருப்புக்கள் அதிகரிக்கத்தொடங்கின. கரையோரப்பிரதேசத்தில் இருந்தவர்கள் இப்பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்தனர். பெண்கள் ஆண்களுக்கு கட்டுப்படுதல் சமூக வழமை என்பதை சமூகம் ஊட்டியதனால் இங்கு வன்முறைகள் காணப்படுகின்றன.

## 10.0 வன்முறையின் வடிவங்கள் அதனால் ஏற்படும் தாக்கங்களும்


### 10.1 உரிமையியல் ரீதியான வன்முறைகளும் தாக்கங்களும்

#### 10.1.1 பால்நிலை ரீதியாக ஓரங்கட்டப்படல்

பால்நிலை என்பது பெண்கள் ஆண்களுக்கு இடையிலான கலாச்சாரத் தன்மையைக் கொண்ட நடத்தைகளாகும்.[85] புத்தாயிரமாம் ஆண்டிற்கான அபிவிருத்திக் குறிக்கோள்களில் நான்காவது குறிக்கோளாக பெண்களின் பால்நிலை சமத்துவத்தையும், பெண்களின் மேன்பாட்டினையும் ஊக்குவித்தல் எனக்கூறுகின்றது. ஆனால் இன்று சமூகத்திலே ஆணுக்கு பெண்ணுக்கு என சில விடயங்கள் கட்டமைத்து இருப்பதனால் பால்நிலை சமத்துவமின்மை ஏற்படுகின்றது. இப்பிரதேசத்தில் ஆணுக்கு, பெண்ணுக்கும் உறவு சமத்துவம் அற்றதாகக் காணப்படுகின்றது. பெண்கள் ஆண்களுக்கு கீழ்ப்பட்டவர்கள், பாரம்பரியமாக ஆண்களில் தங்கி வாழ்பவர்கள் என்ற போக்கு காணப்படுவதினால் அதிக வேலைச்சுமை, வறுமை, சுரண்டல், ஒடுக்குமுறை, வன்முறை ஆகியவற்றிற்கு ஆளாகின்றனர். தீர்மானம் எடுக்கும் அதிகாரம் குறைந்த அளவிலேயே கிடைக்கின்றது. இதனால் தமது தனித்துவமான, பெறுமதியான கருத்துக்களை வெளியிட குறைந்த சந்தர்ப்பமே கிடைக்கின்றது. (இலக்கு குழுக் கலந்துரையாடல்)
பால்நிலை சமத்துவம் அதிகமாக கதைக்கப்பட்டாலும் சமூக, பொருளாதார வளங்களைப்பெறும் வாய்ப்பு இருபாலாருக்கும் சமமாக இருக்க வேண்டும் ஆண், பெண் பாகுபாட்டினைக்காட்டி வளங்களில் பாலின அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் இப்பிரதேசத்தில் காணப்படுவதனால் பால்நிலை சமத்துவம் அற்றுப்போகின்றது. அதே போல் இப்பிரதேச கலாச்சார அமைப்பில் இயற்கையில் பெண்கள் ஆளுமை குறைந்தவர்கள் எனும் போக்கும் காணப்படுகின்றது பால்நிலை சமத்துவமின்மையை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது

**வரைபடம்: 10..1 பால்நிலை சமத்துவமின்மையை காட்டும் வரைபடம்[86]**

பால்நிலை சமத்துவமும்
பங்குபற்றும் வீதமும்




இவ்வரைபடம் குழுநிலைக்கலந்துரையாடலின் மூலம் பெறப்பட்டதாகும். அதிகமானோர் ஆண்களே பால்நிலை வகிபங்கில் முக்கிய பாத்திரம் வகிப்பதாக கூறினார்கள்.

இங்கு ஆண்கள்தான் சமூக வகிபங்கில் முக்கிய இடம் வகிக்கின்றனர். காரணம் கலாச்சாரப்போக்கும் சமூக வழமையுமாகும். மேலும் பெண்களுக்கு இயல்பாகவே காணப்படுவதாகக் கூறப்படும் கலாச்சாரச் செல்வாக்கு, தமது பால்நிலை உரிமையைப்பற்றித் தெளிவின்மை, பிரதேச செல்வாக்கின்மை, தீர்மானம் எடுப்பதில் ஆண்களே ஆதிக்கம் செலுத்துதல், பெண்கள் தோல்வியைப்பெறல் என்ற மனப்பாங்கு. மதங்களின் செல்வாக்கு, பெண்கள் வீட்டில் இருக்க வேண்டும் சமூக நிகழ்வுகளில் ஆண்களே பங்குபற்ற வேண்டும் என்ற எண்ணம், பெண்கள் பாலியல் தேவைகளைப்பூர்த்தி செய்யும் அமைப்புக் கொண்டவள், பெண் தலைமைத்துவ திறன் அற்றவள், எல்லைப்படுத்தப்பட்ட ஆண்களின் சட்டங்கள், குடும்ப அமைப்பும் அதனுடைய வகிபங்கும், தனிநபர் சுதந்திரம், விருப்பு வெறுப்புக்களை பெண்களுக்கு வழங்காமை, தகுதி திறமை இருந்தும் ஆண்களுக்கு முன்னுரிமை வழங்குதல் போன்ற காரணங்களினூடாக பால்நிலை ரீதியான வன்முறைகள் அடையாளங்காணப்பட்டுள்ளன.

மேலும் பால்நிலை ரீதியாக அரசியல் பங்குபற்றுதலை நோக்கினால் ஆணுக்குரிய ஒன்றாகவே அரசியல் பங்கு பற்றுதல் காணப்படுகின்றது. அரசியல் களத்திலே பெண்கள் இறங்கி ஈடுபடுவது குறைவாகக்காணப்படுகின்றது. பால்நிலை ரீதியான ஆணாதிக்கமும், அடிமைத்தனம், தங்கி வாழ்தல், அரசியல் விழிப்புணர்வின்மை, கணவனால் ஏற்படும் வன்முறை, பயந்த சுபாவம், தன்னைத்தானே தாழ்த்துதல், கட்சிகளில் இனைய கணவனால் அனுமதி வழங்காமை, சமூக வழமை போன்ற காரணங்களினால் பெண்கள் பால்நிலை ரீதியாக அரசியல் பங்கு பற்றுதலில் இருந்து ஒரங்கட்டப்படுகின்றனர்.[87]

அதேபோல் பெண்களை எடுத்து நோக்கும்போது வீட்டுச்சுத்தம், உணவு சமைத்தல், குழந்தைகளைப்பராமரித்தல், போன்றவற்றில் ஈடுபட்டாலும் ஆண் இவற்றில் பங்கு கொள்ளாத தன்மையினை இப்பிரதேசத்தில் காணக்கூடியதாய் உள்ளது

**10.1.2 ஆணாதிக்கக் கருத்தியல் (பால்நிலைச் சமத்துவமின்மை)**

இப்பிரதேசத்தில் ஆணாதிக்கப்போக்கு அதிகமாகக் காணப்படுகின்றது. இப்பிரதேசம் கல்வியில் பின்தங்கிய பிரதேசமாகும். பெண்கல்வி என்பது மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. வறுமை பிரதான சமூகப்பிரச்சினையாகக்காணப்படுவதனால் இப்பரதேசத்தின் பொருளாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இதனால் சிறுவர்களும் தொழில் செய்ய வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர். பாரம்பரிய கருத்தியலாக ''ஆண்கள் பெண்களுக்கு கட்டுப்படக்கூடியவள்'' என்ற கருத்தியல் பல்வேறு தரப்பினரினூடாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் சமூகத்திலே காணப்படும் பல்வேறு கருத்தியல் புனைவுகள் பெண்களை அடக்கியாளவும் பயன்படுத்தப்படுகின்றது. இப்புனைவுகளே சமூகத்தின் உண்மைத்தன்மைகளை நிர்ணயம் செய்வதனால் எதுவும் அறியாத அப்பாவிப்பெண்கள் அல்லல்பட்டுப் பாதிக்கப்படுகின்றனர்.

இவை தவிர ஆணாதிக்கக்கருத்தியலை அறியாத மக்களாக இப்பிரதேச மக்கள் காணப்படுகின்றனர். ''ஆண் தனக்கு இயல்பாக அமைந்த வலிமையினால் இயல்பிலேயே மென்மையான பெண்ணை அடிமைப்படுத்துகின்றான்''[88] எனும் கருத்தாடலைப்போல் பணிந்து போதல், ஆணுக்கு கட்டுப்படுதல் என்பது முதியோர்களால் ஊட்டப்படுகிறது. கணவன் மனைவி சிறிய பிரச்சினையானாலும் ஆணாதிக்கமே மேலோங்கிக் காணப்படுகின்றது.

இப்பிரதேச பெண்கள் தாய் வழிச்சமூக அமைப்பினராக தங்களது கலாச்சாரத்தை அமைத்துக் கொண்டனர். திருமணம் முடித்த வேளை தாயை மையமாக வாழ்ந்த பெண் திருமணம் முடிக்கும்போது கணவனின் கட்டுப்பட்டிற்கு உள்ளாகின்றாள் இவ்வேளை தனது கருத்துக்களைக்கூற முனையும்போது ஆணாதிக்கத்திற்கு உட்படுகின்றாள். மேலும் ஆணாதிக்கத்திற்கே வழிகொடுத்துவிட்டு பெண்கள் ஒதுங்கிக் கொள்கின்றனர். சட்டங்களாக இருந்தாலும், சமூக நிகழ்வுகளாக இருந்தாலும் ஆண்களையே முன்னுரிமைப்படுத்துகின்றனர்.

மனைவியே குடும்பத்தை பராமரிக்கூடியவள் என்ற போக்கு இப்பிரதேசத்தில் காணப்படுகிறது. மேலும் ஆண்வழி சமூகத்தொடர்ச்சி இப்பிரதேசத்தில் நிலை பெற்றிருப்பதனால் வாழ்க்கை முறை, பொருளாதார முறை, சொத்துரிமைகள், சட்டங்கள், கட்டளைகள் முதலியவற்றில் ஆணாதிக்கம் அதிகரித்து சமூகத்தின் மேற்கட்டுமானமான மதம், கலாச்சாரம், சமூக விழுமியங்கள், நெறிமுறைகள், போண்றவற்றில் பெண்களுக்கான இடம் குறைந்து காணப்படுகிறது.

சில குடும்பங்களில் நிகழுகின்ற ஆணாதிக்க செயற்பாடானது பெண்களுக்கான சமத்துவ உரிமை, தீர்மானம் மேற்கொள்ளல், சமமான சொத்துப்பங்கீடு, கல்விக்கான வாய்ப்பு, பெண்கள் தொழில்புரிதல், குழந்தை பெறுதல், பாலியல் ரீதியான துன்புறுத்தல் போன்றவற்றில் பெண்கள் அவர்களின்

உரிமைகளைப் பெறுவதில் தடைகளை எதிர்கொள்கிறார்கள். பெண்ணிலை வாதத்தின் வளர்ச்சிக் கருத்துக்கள் அண்மைக்காலத்தில், ஆணாதிக்கத்தின் பிடியிலிருந்து பெண்களை விடுதலை பெறச்செய்வதும் அவர்களின் உரிமை களைப் பெற்றுக்கொள்வதும் என வாதிடுகின்றன. முரண்பாடுகள் மூலமாகவும் குடும்பங்களில் உரிமைமீறல்கள் இடம் பெறுகின்றன.[89] எனக்கூறுவது போல் அடக்குமுறை, சித்திர வதை போன்றவைகள் குடும்பங்களிலும் இடம் பெறுகின்றன. எனவேதான் ஆணாதிக்க செயற்பாட்டினால் பெண்களின் உரிமைகள் தடை செய்யப்படுவதும் உரிமைமீறுதற் செயற்பாட்டின் ஒரு வடிவமாகவுள்ளது. பால்ரீதியாகக் காட்டப்படும் பாரபட்சமும் தினமும் பெண்களைப் பாதிக்கின்றது. இனம், வர்க்கம், மற்றும் வேறு வகையான ஒடுக்கு முறைகளுடன் சேரும்போது இத்தகைய பாரபட்சம் பெண்களது உரிமைக் கும் சுதந்திரத்திற்கும் தடையாய் உள்ளது.

### 10.1.3 உரிமைகளை வழங்குவதில் காணப்படும் குறைப்பாடுகளும் பிரச்சினைகளும்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 12 (1) சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமனானவர்கள் அத்துடன் அவர்கள் சட்டத்தினால் சமனாக பாதுகாக்கப்படுவதற்கும் உரித்துடையவர்கள் எனக் கூறுகின்றது அதே போல் ஏனைய 10 11 ம் சரத்து கொடூரமான மனிதாபிமானமற்ற சித்திரவதைகளிலிருந்து விடுதலை பெறுதல் எனக் கூறுகின்றது ஆனால் ஆய்வுப் பிரதேசத்தில் அதிகமான அடிப்படை உரிமை மீறல்கள் இடம் பெற்று வருகின்றன. மலையடிகிராமம் - 01 இல் மட்டும் 25 விவாகரத்து இடம்பெற்றுள்ளன அவற்றிற்கான காரணங்களில் ஆண் பெண் என்பவர்களின் உரிமைகள் முறையாக செயற்படுத்தப்படாமல் அவரவர் போக்கில் வாழ்ந்தமை காரணமாகும்

### 10.2.0 வீட்டு வன்முறையும் அதனால் ஏற்படும் தாக்கங்களும்.

வீட்டு வன்முறை என்பது அடிப்படை உரிமைகளுக்கும் தொந்தரவிலிருந்து சுதந்திரத்திற்கும் இழைக்கப்படும் துஸ்பிரயோகமாகும். குடும்ப வன்முறை என்பது இணையான ஒரு ஆண் ஒருவரினால் வீட்டுச் சூழலுக்குள்ளாக அல்லது வெளியே புரியப்பட்டதும் அல்லது விளைவிக்கப்பட்டதும் துன்புற்ற ஆளுக்கும் இயைபான ஆளுக்கும் இடையேயுள்ள உறவுமுறையின் தனிப்பட்ட தன்மையிலிருந்து எழுவதுமானதாகும[90].

இன்னும் ஒரு வகையில் வீட்டுவன்முறை என்பது பெண்களின் அதிகாரவரம்பிற்கு இழைக்கப்படும் ஒரு தீய செயலாகும். வீட்டின் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியில் அவர்களது பங்கில் நேரடியாகவும் மறைமுகமாகவும் இழைக்கப்படும் ஓர் வன்முறையாகும்[91]

ஒவ்வொரு சமூகங்களைச் சேர்ந்த ஒவ்வொரு பெண்ணும் வீட்டிலோ, வீதியிலோ, வேலைத்தளத்திலோ ஏதோ ஒரு வகையில் வன்முறைக்குட்படுத்தப்படக்கூடும் என்ற அச்சத்துடன் வாழ்கின்றார்கள்[92] இந்த வகையில் இப்பிரதேசத்தில் வீட்டு வன்முறைகளாக சீதனக் கொடுமை காணப்படுகின்றது. சில குடும்பங்களில் சீதனம் தருவதாகக் கூறி திருமணம் முடித்ததன் பின் சீதனத்தை கொடுக்கத் தவறியதால் சிலர் விவாகரத்துப் பெற்றுள்ளனர். இவைதவிர ஆண்களைத் தலமைத்துவமாக கொண்ட குடும்பங்களில் ஆணாதிக்கம் மேல் நுழைகின்றபோது அங்கு வீட்டு வன்முறை ஏற்படுகிறது. இருவரும் தொழில் செய்யும் குடும்பங்களில் தங்களிடையே புரிந்துணர்வு இல்லாமையினால் குழந்தை வளர்ப்பில் இருவரும் முரண்படுகின்றனர். தந்தை உழைத்தல் என்ற எண்ணப்போக்கு இப்பிரதேசத்தில் கலாச்சார அடிப்படையில் இருந்தாலும் பெண்களும் தங்களது குழந்தைகளுக்காக வெளியிடங்களுக்கு சென்று உழைக்கவேண்டியுள்ளது. கணவன்மார்களும் பெண்களை உழைக்குமாறு கூறுவதனால் பெண்கள் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

மேலும் கணவன் மதுபோதை அருந்திவிட்டு மனைவியை தாக்குதல் அதிகமாக இடம்பெறுகின்றது. கல்வியறிவு குறைந்த மட்டத்தில் இருப்பதனால் இது இடம்பெறுகின்றது. இப்பிரதேசத்தில் ஒரு குடும்பத்தில் தந்தை மகளை குடித்து விட்டு தகாத நடத்தையை ஏற்படுத்த முனைந்துள்ளார். இதனால் அப்பெண் தனது தந்தை என்றும் பார்க்காமல் வீட்டைவிட்டு துரத்தி தனது பெற்றோருடனான உறவை விலக்கியுள்ளார். இதனால் தனிமையாக வாழ்ந்து வருகின்றாள்.

பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்படுவதனால் உடல், உள ரீதியாக துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுவதனால் சமுதாயத்திலிருந்து விலகி நடக்ககூடிய தன்மை காணப்படுகிறது. வன்முறையினால் பெண் கல்வி சமுதாயப்பற்று, கருத்துத் தெரிவித்தல் போன்றவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

**10.2.1 வீட்டு வன்முறைகளும் நிறுவனங்களின் தொழிற்பாடுகளும்**

வீட்டு வன்முறை அபிவிருத்திப்போக்கில் பாரிய தடையை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் நல்லிணக்கமற்ற சமுதாயத்தையும், நீதித்துறையை, நிறுவனங்களை நாடிய சமுதாயத்தையும் தோற்றுவித்துள்ளது. மலையடிக் கிராமம் - 01 இல் மட்டும் 25 விவாகரத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இவை தவிர காழி நீதி மன்றங்களில் வன்முறையினால் பாதிக்கப்பட்டு வருவோர் தொகை அதிகரித்து வருகின்றது. நீதிமன்றம் பொலிஸ் நிலைய அறிக்கைகள் அதிகரித்துள்ளன சொத்து, சீதனம் வழங்காமை, தீராத சண்டைகள், போன்றவற்றினால் பொலிஸ், நீதி மன்றங்களை நாடுவோர் தொகையும் அதிகரித்துள்ளது.

இவை தவிர பெண் சங்கங்களின் எண்ணிக்கையும், அதன் செயற்பாடுகளும் அதிகரித்துள்ளன. இங்கு அநாதைகளைப் பராமரிப்பதற்காக உஸ்வா ஆண், பெண் மத்ரஸாக்கள் காணப்படுகின்றன. இவற்றின் செயற்பாடும் அதிகரித்துள்ளது. கணவனின் கெட்ட பழக்கத்தின் பின்னர் கணவனோடு தொடர்ந்து வாழ முடியாத மனைவி தனது பிள்ளைகளை கணவனிடமிருந்து விலக்கிக் கொண்டு அநாதை இல்லங்களில் தமது பிள்ளைகளைச் சேர்க்கின்றனர்.

சில குடும்பங்களில் கணவன் மது அருந்திவிட்ட மனைவியைத் துன்புறுத்துகின்றான். சிலர் நாளாந்த கூலி வேலை செய்து கிடைக்கும் வருமானத்தை தீய வழியில் செலவு செய்வதுடன் குடும்பம் என்ற நிறுவனத்தின் நற்பெயரிற்கும் பங்கம் விளைவிக்கின்றனர். சில வேளை குடி போதையில் தனது மகளை பாலியல் பலாத்காரத்திற்கு கணவன் உட்படுத்திய நிகழ்வுகளும் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றது. இதனால் பெண்கள் தமது அடிப்படை உரிமைகளை இழக்கின்றனர். மேலும் பலதார மணம் அதிகரித்து சமூக ஸ்திரத் தன்மையிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.[93]

வீட்டு வன்முறைகள் அதிகமாக இடம்பெறும்போது மனைவி அதிக குழந்தைகளைப் பெற விருப்பமில்லாமையை வெளிப்படுத்துகின்றாள் மேலும் அதிகமான வன்முறை ஏற்படும் பொழுது தமது தேவைகளை நிறைவு செய்ய முடியாமலும் காணப்படுகின்றாள். பிள்ளைகளை உரிய முறையில் வளர்ப்பதற்கு பின்னிற்பதால் சில குடும்பங்களில் கல்வி வீதம் மிகவும் பின்தங்கிய போக்கில் காணப்படுகின்றது இதற்கு காரணம் வீட்டு வன்முறையாகும்.

மேலும் பெண்கள் வன்முறைக்குட்படுவதினால் பெண் குழந்தைகளைப் பெற விருப்பமில்லாமல் கருத்தடை செய்யும் நிகழ்வுகள் காணப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் கருக்கலைப்பு ஏற்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. தமது சொந்தங்களை சந்திக்க விடாமையும் காணப்படுகின்றது. வீட்டு வன்முறையினால் தற்கொலை செய்ய எண்ணுவதாகவும் சிலர் கூறுகின்றனர். சிலர் உணர்ச்சி முறையற்ற பாலியல் வன்முறையிலும் ஈடுபட்டதாக ஆய்விலிருந்து தெரிய வருகிறது.

### 10.2.2 விவாகரத்தும் அதனால் ஏற்படும் தாக்கங்களும்

திருமணவாழ்வில் கணவன் மனைவிக்கிடையிலான கருத்து முரண்பாடுகள் பல்வேறு காரணங்களால் உருவாகின்றன. சில வேளை பெரிய காரணங்களினாலும் வேறுசில சந்தர்ப்பங்களில் மிக அற்பக் காரணங்களுக்காகவும் ஏற்படுகின்றன. ஆனால் இந்த கருத்து முரண்பாடுகள் காலப்போக்கில் விவாகரத்தாக மாறுவதனையும் அதனால் குடும்பங்கள் பிரிந்து செல்வதும் சாதாரண நிகழ்வாக இப்பிரதேசத்தில் அவதானிக்க முடிகின்றது.

சம்மாந்துறையில் கிராமப்புங்களில் உள்ள மக்கள் பல்வேறுபட்ட தொழில் புரிபவர்களாக உள்ளனர். அதாவது பண்ணை விவசாயம், வேளாண்மை, கல்லுடைத்தல், செங்கல் உற்பத்தி, மேசன், பெட்டிக்கடை வியாபாரம் என்று பல தொழில்துறைகளில் ஈடுபடுகின்றனர். இச் சிறு வறுமானத்தால் தனது சொந்த தேவைகளை நிவர்த்தி செய்ய இயலாதிருக்கின்றனர்.

கணவன் விவாகரத்துப் பெறும்போது மனைவி அல்லது பெண் பிள்ளைகள் வெளிநாடு செல்கின்றனர். இவ்வாறாக வெளிநாட்டு வேலைவாய்ப்பினை நாடி பெண்கள் செல்வதற்கான முக்கிய காரணங்களாக: கணவனால் கைவிடப்படல், விவாகரத்து, பிள்ளைப்பராமரிப்பின்மை , வறுமை, பிள்ளைகளின் கல்வியை, எதிர்காலத்தை உயர்த்த வேண்டும் என்ற எண்ணம், பெண்கள் தமது சமூக அந்தஸ்தை உயர்த்துதல்பெண் பிள்ளைகளுக்காக வீடு மற்றும் சீதனத்தை வழங்கலுமாகும்.

இக்காரணங்களினால் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்குச் செல்லும் மனைவி. வெளிநாட்டுச் சூழல், தொழிலின் சுமை, பொழுது போக்கு, சில வேளைகளில் அங்குள்ளவர்களால் வஞ்சிக்கப்படுகின்றனர். இதனால் மேலும் பெண்கள் வன்முறைகளையே உள்வாங்குகின்றனர். சில வெளிநாடு சென்ற கணவன்மார் தன் மனைவியருக்கு தொடர்சியாக பணம் அனுப்பாது விடுகின்றனர். இதனையிட்டு சில பெண்கள் வெளிநாடு செல்வதால் தாய்சேய் உறவில் பாதிப்பு, உறவினர்கள் சந்தேகம் கொள்ளல், பக்கத்து வீட்டார் வெளிநாடு சென்ற குடும்பத்திலுள்ள பிள்ளைகளை விமர்சித்தல், சண்டையிடல், சமூக ஒதுக்கம் காணப்படல் போன்றவைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. கடின உழைப்பின் மூலம் மனைவி திரட்டியனுப்பிய பணத்தை கணவன்மார் வீணாகச் செலவு செய்து விடுதல், மது அடுத்துதல், ஒழுக்கக் கேடான வகையில் செலவு செய்து விடுதல், மது அருந்துதல், ஒழுக்கக்கேடான வாழ்க்கையில் ஈடுபடல் என்பன காரணமாக அவ்விருவரிடையே உறவு படிப்படியாக கசப்பு நிலைக்கு உள்ளாகி விவாகரத்து பெறுகின்றனர்.

மறுபக்கம் வெளிநாடு சென்ற பெண்களும் அந்நிய ஆடவர்களுடன் அன்னியோன்யமாக பழகுவதால் தகாத உறுவுக்குள்ளாகி திருமணம் வரையும் சென்றுவிடுகின்றனர். ஏனெனில் வேலைவாய்ப்பைக் கருத்திற் கொண்டு தொழில் முகவர்கள் போலி ஆவணங்களுடன் எவ்வித தொடர்பும் இல்லாத ஆண்களையும், பெண்களையும் போலிச் சோடிகளாக அனுப்பி வைக்கின்றனர். அங்கு அவர்கள் நெருக்கமாக வாழ அனுமதிக்கப்படுவதால் நிலைமை மோசமாகிவிடுவதுண்டு. இத்தகையோா் மீண்டும் ஊர்திரும்பி வரும்போதே தன் கணவனிடமிருந்து விவாக விடுதலை பெறும் முடிவுடன் தன் கணவனிடமிருந்து விவாக விடுதலை பெறுகின்றனர் ஆனால் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை கவனத்தில் கொள்வதில்லை. என சம்மாந்துறைப் பிரதேச 'காழி'[***] குறிப்பிட்டார். மேலும் கணவன் உழைத்துவந்தாலும் அதனைக் கொண்டு புரிந்துணர்வோடு வாழ்க்கைச் செலவினை கொண்டு செல்ல முடியாத காரணத்தினாலும், கணவன் தொழில் அற்று இருக்கும் போது குடும்பச் சுமைகள் மனைவியை சேருகின்ற போதும் கணவன் மீது வெறுப்புக் கொண்டு மனைவி விவாகரத்துப் பெற்றுக் கொள்கின்றாள்.இதனை இக்கிராமப்புறங்களில் அதிகமாக காணக்கூடியதை விவாகரத்துப் பெற்றவர்களின் தகவல்களில் இருந்து அறிய முடிகின்றது.

இப்பிரதேசத்தில் 50 க்கும் மேற்பட்ட விவாகரத்துக்கள் இடம் பெற்றுள்ளன இதற்கான காரணிகளை ஆய்வு செய்த போது அதிகமான விவாகரத்துக்கள் சமூக ரீதியான தாக்கங்களின் மூலமே இடம் பெற்றுள்ளதை அவதானிக்கலாம். திருமண வாழ்க்கையில் கருத்து முரண்பாடுகள், புரிந்துணர்வுடன், பரஸ்பர தொடர்புகள் இன்மை, இன்ப துன்பங்களை பகிர்ந்து கொள்ளாமை, காதலிக்கும் போது நடந்து கொண்ட முறைக்கும் நடத்தைக்கும், திருமணத்தின் பின் நடந்து கொள்ளும் நடத்தைக்கும் இடையில் வித்தியாசங்கள் காணப்படுகின்றமை, கருத்து முரண்பாடுகளை ஒருவருக்கு ஒருவர் வளர்த்தல், சொற்கேளாமை போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன என சிறுவர் நன்னடத்தை அதிகாரியும் குடும்ப ஆலோசகரிடமிருந்தும் பெறக்கூடியதாய் இருந்தது.

ஒரு பெண்ணிடம் கருத்து முரண்பாடு தோன்றுவது பற்றி கேட்ட போது, அவர் கூறியதாவது : கனவன் அமைதியை விரும்பினாலும் பிள்ளைகளின் குறுப்புகளை சகிக்காமையாக காணப்படும் போது இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு பிரிந்தோம் என்றார்.

இன்னும் சில குடும்பங்களில் பிள்ளைகள் பிறந்து குடும்பமாக மாறுகின்ற போது பொருளாதாரச் சிக்கல்கள் தோன்றுவதுடன், படித்த கணவன்மாருக்கு படியாத மனைவியரும், படித்த மனைவியருக்கு படியாத கணவன்மாரும் திருமணம் முடிப்பதாலும் பிரிவுகள் ஏற்படுகின்றன.

இன்றைய நவீன தொழிநுட்ப தொடர்பாடல் சாதனங்களில் ஒன்றான கையடக்கத்தொலைபேசி மூலம் ஓரிரு குடும்பங்கள் பிரிந்துள்ளதாக ''காழி'' அவர்கள் குறிப்பிட்டார்கள். இக்காரணமே பிரதானமாக காணப்பட்டாலும் அவர்கள் ''காழி நீதிமன்றத்திற்கு'' வேறு விதமான காரணங்களை சொல்வதாகவும், பின்னர் அவர்களது பிரிவுக்கான உண்மைக்காரணிகளை அறிகின்ற போது கையடக்கத் தொலைபேசி மூலம் ஏற்பட்ட சந்தேகத்தன்மை என்பதை அறிய முடிகின்றது. மேலும் தவறான பாலியல் விவகாரங்களை மையமாகக் கொண்ட படங்கள், சீடிக்கள் போன்றவற்றை பார்ப்பதன் மூலம் கணவனோ மனைவியோ பிறருடன் தவறான நடத்தையில் ஈடுபடுகின்றனர். இதனாலும் விவாகரத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும், குண்டமாத்து திருமணம் மூலம் கணவர் தனது மனைவி செய்கின்ற குற்றத்திற்காக தண்டிக்கின்ற போது அதனைக் கண்ணுற்ற மனைவியின் சகோதரன் தனது மனைவியை அணியாயமான முறையில் தண்டிக்கிறார் இதனால் விவாகரத்துக்கள் இடம் பெறுகின்றன. இவ்வாறான இன்னும் பல சமூகவியற் காரணங்களால் விவாகரத்துக்கள் இடம் பெறுவதை மலையடிக்கிராமத்தில் அவதானிக்க முடிகின்றது. அவைகளாவன

01. மனைவி சொற்கேளாமை
02. வேறு பெண்ணை திருமணம் செய்தமை
03. கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட சந்தேகம்
04. கணவன், மனைவி, பிள்ளைகளை பராமரிக்காமை
05. கணவனை மனைவியை பராமரிக்காமை
06. போதைப் பொருளுக்கு அடிமையாதல் (கணவன்)
07. பொருத்தப்பாடின்மை, ஒத்துழையாமை (பாலியல் இன்பம்)
08. கணவன் அல்லது மனைவிக்கு நோய்
09. கருத்து முரண்பாடு, சண்டை, கொடுமை
10. கணவன் அனுமதியின்றி வெளிநாடு செல்லல்
11. கணவன் மாயமாக மறைதல்
12. ஒரே சேளையில் மனைவியின் சகோதரியை திருமணம் முடித்தமை
13. பெற்றோரின் வற்புறுத்தலால் இடம் பெற்ற கட்டாயத் திருமணம்
14. மனைவியின் பொருட்களை கணவன் நட்டப்படுத்தல்

15. ஆண் வெளிநாடு சென்றமையும் அதனால் மனைவி கள்ளத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டமை அல்லது கணவன் கள்ளத் தொடர்பு வைத்திருத்தல்
16. கணவன், மாமியாரின் தொல்லைக்குட்படல் அதாவது மாமியாரின் கட்டுப்பாட்டுக்கு ஏற்ப மருமகன் இயங்க வேண்டும் என்ற நிலை
17. இஸ்லாத்தில் தவிர்க்கப்பட்ட செயல்களில் மனைவி ஈடுபட்டமை
18. கணவனுக்கு தொழில் இன்மை

இவ்வாறான காரணிகள் விவாகரத்துக்கு காரணமாகும் என ஆய்வினூடாக அறிய முடிகின்றது.

### 10.2.3 மாமியார் கொடுமையும் விளைவுகளும்

இப்பிரசேத்திலுள்ள நகரப்புற மக்கள், பணக்காரர்கள் போன்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்கு அரசாங்க தொழில்பார்க்கும் மணமகனையே தேடுகின்றனர். அதிலும் செல்வந்தர்கள், நல்ல ஒழுக்கமான குடும்பத்தையுடையவர்கள் போன்றோர் வைத்தியர், பொறியியலாளர், சட்டத்தரணி போன்றோர்களை அதிகம் விரும்பி மணமகனாக எடுக்கின்றனர். இச்சந்தர்ப்பத்தில் மணமகன் உயர்ந்த தொழில் இருக்க வேண்டும் எனப் பார்க்கின்றனர். மாறாக அவர் எப்படிப்பட்ட சூழலில் வாழ்ந்தவர், அவரது குடும்பம் எவ்வாறான ஒழுக்கப்பண்பாடுகளைக் கொண்டவர்கள் எனப் பார்த்து திருமணம் முடிக்காமல் வெறுமனே தொழிலுக்காகவும், சீதனத்துக்காகவும் முடிக்கின்றனர். இவ்வேளையில் இரு வீட்டாரும் முரண்பாட்டுக்குள்ளாகின்றனர். மணமகளின் நடத்தையில் சரிகாணாத மணமகன் வீட்டார் அவனது பெற்றோர் குலம் என்ற தராதரம் பார்த்து ஏசுகின்றனர். அதேவேளையில் மணமகன் வீட்டார் ஏழையாக இருப்பதால் மணமகள் வீட்டார் அவர்களை அவமதிக்கின்றனர். இதனால் இருவருக்குமிடையே கருத்து முரண்பாடுகள் தோன்றி விவாகரத்து பெற்றுள்ளனர். இதனால் பாதிக்கப்படுவது இருவருமே.

மேலும் திருமணப் பேச்சுவார்த்தையின் போது மணமகள் வீட்டார் திருமணத்தின் பின்னர் தருவதாக கூறி சீதனத்தை திருமணம் முடித்த பின்னர் கொடுக்க மறுக்கின்றனர். இதனால் கணவன் தனக்கு தரவேண்டிய சீதனத்தை மனைவியிடம் கேட்டு துன்புறுத்துகின்றமையினால் இறுதியில் சீதனம் கொடுக்க முடியாமல் இறுதியில் இருவரும் விவாகரத்து பெறுகின்றனர். சில வேளை மாமியார் தனக்கு சேவை செய்ய வேண்டும் அல்லது பொருள் பண்டங்கள் தர வேண்டும் என கொடுமைப்படுத்தவதினால் பல திருமணங்கள் பிரிந்துள்ளமையினையும் அவதானிக்க முடிகிறது.

### கலாச்சார வன்முறைகளும் தாக்கங்களும்

இச்சமூதாயத்தில் பாரம்பரிய பண்பாடுகள் முக்கிய இடம் வகிக்கின்றது[94] மேலும் பெண்கள் கல்வி கற்பதை இப்பிரதேச மக்கள் விரும்புவதில்லை, அத்தோடு இளமையிலேயே பெண்கள் திருமணம் முடிக்கும் நிகழ்வும் காணப்படுகின்றது. இதனால் பெண்கள் கல்வி கற்பது 20% இலும் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் ஆண்களை விட பெண்களின் கல்வி குறைவாகவே காணப்படுகின்றது. இதனைப் பெண்கள் ஆண்களுக்கு அடங்கிப் போகும் பண்பு காணப்படுவதனால் வன்முறை எது என்பதை விளங்காதுள்ளனர்.

இம்மக்கள் எழுதப்படாத சட்டங்களை பின்பற்றும் அமைப்புக்களாக உள்ளனர். வாய்மொழிமூலமான சட்டங்கள் போன்றவற்றை சமூக வழமையாக குடும்பத்தில் பேண முற்படுகின்றனர். ஆண்களே சமூக நியதிகளில் பங்கு கொள்ளக் கூடியவர்கள் பெண்கள் அவர்களுக்கு உதவி செய்யக்கூடியவர்கள், ஆண் பெண்ணுக்கு தொண்டு செய்யக்கூடியவன் என்ற புனைவுப்போக்கு போன்ற முறையற்ற அதிகாரக்கட்டமைப்பு நம்பிக்கைகள் காணப்படுகின்றது. இது பெண்கள் தொடர்பில் சமூகத்தால் உருவாக்கப்பட்ட சட்டங்களாக இருக்கின்றன. மேலும் சில மூடநம்பிக்கைகள், கருத்துக்கள் பெண்களை மேலும் மேலும் வழிகெட வைத்துள்ளது. உதாரணமாக சில:

பெண்புத்தி பின்புத்தி
அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு
எண்ணறக்கற்று எழுத்துற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தி
பெண்ணுக்கு அழகு அடக்கம்

போன்ற நம்பிக்கைகள் பெண்களை அடக்கி ஆழ்கின்றன. மேலும் பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்படுவதற்கான காரணங்களில் பெண்களே முன்னிற்பவர்களாக உள்ளனர். என்பதும் ஆய்வில் தெரிய வருகின்றது. ஆண்கள் வெளிநாடு சென்ற போது பெண்கள் வேறு நபருடன் தொடர்பு கொண்டு உரையாடுதல், பிள்ளைகளை முறையாக கவனிக்காமை போன்ற காரணங்களால் ஆத்திரமடைந்த கணவன் மனைவியை தாறுமாறாக தாக்குகின்றான். இதனால் அவள் பிரச்சினைகளை சந்திக்கின்றாள். மேலும் பெண் கலாச்சார மனப்போக்கை நோக்கினால் கணவருக்கு கட்டுப்பட்டு காலாகாலமாக இருந்ததினால் வன்முறைகளை விளங்காது உள்ளாள்.

மேலும் கலாச்சாரம் என்ற போர்வையில் பெண்கள் அடக்கியாளப்படுகின்றனர். ஒரு பண்பாடும் பரம்பரையும் சேர்ந்து மக்களின் நடத்தைகளை உருவாக்குகின்றது.[95] இங்கு ஆணாதிக்கமுள்ள குடும்பம் தனது போக்கினை திணிக்க முற்படும்போது பெண்ணாணவள் பாதிக்கப்படுகின்றாள். அதிகமான விவாகரத்துக்களும் வன்முறைகளும் கலாச்சாரத்தை மையப்படுத்திக் காணப்படுகின்றது. படிப்பறிவில்லாதவர்கள் ஒருவரை ஒருவர் புரியாமல் முரண்பட்டு வன்முறைகள் எவை எனத் தெரியாமல் பிரச்சினைக்குள்ளாகின்றனர். இது முழு சமுதாயத்தையும் பாதிக்கின்றது.

பெண்களின் அழகு, பெண்கள் முதுமையடைதல் கலையுணர்வுகளை மதிக்காமை, தோசம் பிடித்தவள், எனக்கூறல் நிற ரீதியில் உதாசீனம்செய்தல், பண்டைய வழக்காறுகள் சடங்குகள் மீது ஆண்களின் ஆதிக்கம், கணவனே தெய்வம் என்ற கருத்தியலின் பிடியில் பெண்கள் கட்டுண்டு கலாச்சாரபாரம்பரியங்களை இழந்து பாதிப்புக்களைப் பெறுகின்றனர்.

திருமணம் முடித்த பின் தாய் வழிச்சமூக அமைப்பிலிருந்து தந்தை வழிச்சமூக அமைப்பிற்கு மாற்றமடைகிறாள். ஆனால் திருமணம் முடித்த வேளையில் ஆணாதிக்க கருத்தியல்கள் முக்கிய இடம் வகிப்பதனால் பல பெறுமதியான பெண்களின் விடயங்கள் தட்டிக்கழிக்கப்படுகின்றன.

உதாரணமாக: சட்டமாக, சமூக விடயமாக இருந்தாலும் ஆண்களையே முன்னுரிமைப்படுத்துகின்றனர்.

**10.4 தொழில் ரீதியான வன்முறைகளும் தாக்கங்களும்**

இப்பிரதேசத்தை எடுத்து நோக்கும்போது பின்தங்கிய பிரதேசமாகக் காணப்படுகின்றது. கல்வி கற்கும் வீதம் குறைந்து காணப்படுவதனால் விவசாயம், மந்தை மேய்ப்பு, செங்கல் உற்பத்தி, தயிர் விற்பனை செய்தல், துவிச்சக்கர வண்டி திருத்துதல், வலை பின்னுதல், நெல் குற்றி விற்றல், சிறிய கல்லுடைத்தல், சிறிய வியாபாரம் போன்ற தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் பொருளாதாரத்தின் பின்தங்கிய பிரதேசமாகக் காணப்படுவதனால் ஆண்களுடன் பெண்களும் உழைக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை காணப்படுகிறது. இப்பிரதேச குடும்பங்களில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை சராசரியாக 04 காணப்படுகின்றனர். அனைவரும் பெண் பிள்ளைகளாக உள்ள குடும்பங்களில் பெண்கள் தொழிலில் ஈடுபட வேண்டியுள்ளது.

பெண்கள் தொழிலில் ஈடுபடும்போது சமூகம் வித்தியாசமான கண்ணோட்டத்தில் நோக்குகிறது. சில பெண்கள் கூலி வேலையில் ஈடுபடும்போது வேலைத்தளச்சூழல் வன்முறைகளை உள்வாங்குவதற்குக்காரணமாகின்றது. அரச, தனியார் துறைகளில் பெண்கள் வேலை செய்தாலும் கூடுதலாக தனியார் துறைகளில்தான் பெண்கள் வேலை பார்க்கின்றனர். இங்கு ஆண்கள் மேலானவர்கள்

என்று தொழிற் தளங்களில் காணப்படும் எண்ணப்பாடு, ஆண் ஆதிக்கம் உள்ளவன், ஆண்களே மேற்பார்வை செய்யக்கூடியவர்கள், பெண்கள் ஆண்களுக்கு கட்டுப்படக்கூடியவர்கள், ஆண்களின் அதிகார மேற்பார்வை, எதிர்த்து தமது தொழில் ரீதியான பிரச்சினைகளைச் சொல்ல முடியாமை, போண்ற பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர் கொள்கின்றனர்.

ஒரு பெண் தனியாக வேலைக்குச் செல்கின்றாளென்றால் அயல் வீட்டார் அவளை வித்தியாசப்படுத்திப் பார்க்கின்றனர். இங்கு குடும்பங்களில் கணவன் மனைவியிடையே முரண்பாடுகள் தோற்றுவிக்கின்றனர். இவை தவிர தொழில் தளங்களில் ஆண்களைவிட பெண்களுக்கு குறைந்த கூலியே கொடுக்கப்படுகிறது. கணவனால் கைவிடப்பட்ட குடும்பங்களில் பெண்கள் உழைக்க வேண்டிய தேவை இருந்தாலும் இப் பெண்களுக்கு குறைந்த கூலியே கொடுக்கப்படுவதனால் ஊழியச்சுரண்டல் இடம்பெறுகிறது.

## 11.0 பெண்கள் தங்களின் உரிமைகளை முன்னெடுத்துச் செல்கின்ற போது எதிர்கொள்ளும் சவால்கள்

1. பெண்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதிலும், அவர்களின் உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் செயற்பாட்டுத்திறனுடன் முன்னெடுத்துச் செல்லக்கூடிய தகுதி பெண்களிடம் காணப்படாமை என்ற மனப்பாங்கு.
2. பெண்களின் கல்வியில் பெண்கள் உரிமைகளைப் பற்றிய முக்கியத்துவமின்மை.
3. பெண்களுடைய உரிமை ஏன் மீறப்படுகின்றது? என்ற கேள்வியினை தட்டிக் கேட்க தனித்துவமிக்க நிறுவனங்கள் செயற்பாடாமை
4. பெண் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதில் சமூகத்தில் அனைத்து பெண்களின் ஒத்துழைப்புக் கிடைக்காமை.
5. பொருளாதார ரீதியில் பெண்கள் ஆண்களில் தங்கியிருக்கும் நிலை.
6. தொடர்பு சாதன ஊடகங்களில் பெண்களின் பிரச்சினைகளை அதிகளவில் விவாதிக்கப்படாமை.
7. சொத்துப் பங்கீடுகளின் போது பெண்களுக்கு அநீதி விளைவிக்கப்படுகின்றமை.
8. அதிகாரம் செலுத்துகின்ற நிலையில் பெண்களின் நிலை மிகமிக குறைவு.
9. சட்ட முறைமைகளை ஆராய்தல், சமூக வலுவூட்டல்கள் போன்றவை பிரதான விடயங்களாக கணிக்கப்பட்டாலும் பெண்கள் தொடர்பில் கவனம் செலுத்துவது மிகக்குறைவாக உள்ளமை
10. பெண்களின் உரிமைகளை அல்லது அவர்களின் பிரச்சினைகளைப்பற்றி பேசுவதிலும் அதற்கான தீர்வுகளை எட்டுவதிலும் வழிமுறைகள் மிகமிக அரிதாகவே உள்ளது
11. சட்டத்திற்கு முன் பெண்கள் செல்லத் தயங்குகின்றமையும் பாதிக்கப்பட்ட பெண்கள் தமது பாதிப்புக்களை வெளியே சொல்லத் தயங்குகின்றமையும், பாதிப்பைச் சொன்னால் தமது எதிர்காலம் பாதிக்கப்படுவதாக உணர்தல்.

## 13.0 முடிவுரையும் விதந்துரைகளும்

எதுஎவ்வாறாயினும் பெண்களுக்கு எதிராக வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. இது மனித உரிமை மீறல்களாக மாறி வருகின்றது. பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்படுவதற்கு அச்சமூக வழமை காரணமாக அமைகின்ற அதே வேளை பெண்களும் வன்முறைகளை விளங்காது காணப்படுகின்றனர். மேலும் பொருளாதாரக்காரணிகளான வறுமையும் தொழில்வாய்ப்பின்மையும், சீதனமும் அதுசார்ந்த பொருளாதார பிரச்சினையும், வெளிநாட்டு வேளைவாய்ப்பும் மோகமும். சமூகக் காரணிகளான சமூகக்கட்டமைப்பு, சமூக நிறுவனங்களில் காணப்படும் குறைபாடு ,போதாமை, பெற்றோர் முரண்பாடு, கணவனின் கெட்ட பழக்கம், பெற்றோர் பிரிந்து வாழ்தல் போன்றவையும், பல்வேறு கலாச்சாரக்காரணிகளும் செல்வாக்குச் செலுத்துவதனை அவதானிக்க முடிகிறது. பெண்கள் எதிர்நோக்கும் சவால்களில் உரிமையியல் ரீதியில் பால்நிலை ரீதியாக ஓரங்கட்டப்படல், ஆணாதிக்கக் கருத்தியல் (பால்நிலைச் சமத்துவமின்மை), உரிமைகளை வழங்குவதில் காணப்படும் குறைப்பாடுகள் போன்றவையும் குடும்ப வன்முறையில்

விவாகரத்து, மாமியார் கொடுமையும் கலாச்சார, தொழில் ரீதியான வன்முறைகளையும் சந்திக்கின்றனர். இவ்வாறான வன்முறைகள் பெண்களின் அபிவிருத்திப்போக்கில் பாரிய தாக்கத்தினை செலுத்தியுள்ளதனை இவ்வாய்வில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பெண்களின் இவ்வாறான பாதிப்புக்களில் இருந்து மீள பின்வரும் பரிந்துரைகளை ஆய்வாளர்கள் என்ற வகையில் முன்வைக்க முடியும்.

- பல்வேறு சட்ட நடைமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் குறிப்பாக குற்றவியல் சட்டம், தண்டனைச்சட்டக்கோவை போன்றவற்றை சமூகத்திற்கு தெளிவு படுத்த வேண்டும் இதற்கு பிரதேச ரீதியில் இயங்கும் காழி, பொலிஸ், சமூக சேவை அமைப்புக்களினூடாக நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் திருமணச்சட்டம் விவாகரத்துச் சட்டம், அடிப்படை உரிமைகள், போன்றவற்றையும் ஆண், பெண் இரு பாலாருக்கும் விளக்க வேண்டும்.
- பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- பெண்களுக்கான திட்டங்களை முன்மொழிய வேண்டும் பெண்கள் வன்முறைகளை விளங்கும் வகையில் திட்டங்களை இப்பிரதேசத்தில் ஏற்படுத்தி வலுவூட்டவேண்டும். இதற்ககாக பயிற்சி பட்டறைகளை நடாத்த வேண்டும்.
- பிரதேச பெண்கள் அமைப்புக்கள், கிராமிய மட்டக்குழுக்கள் வலுவூட்டி பெண்கள் வன்முறைகளிருந்தும் சவால்களிலிருந்தும் விடுபடுவதற்கான சட்ட நடைமுறைகளை தெளிவுபடுத்த வேண்டும்.
- சமூக நிகழ்வுகளில் பெண்கள் பங்குபற்றுவதை அதிகரிக்க வேண்டும். ஆண்,பெண் என்ற பாகுபாடின்றி பெண்களை தமது சமூக அமைப்புக்கு ஏற்றாற் போல் பயிற்றுவிக்க வேண்டும்.
- ஆணாதிக்க போக்கினைக் குறைக்க விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தி பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்பட்டால் எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளையும் இப்பிரதேச மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் குறிப்பாக விவாகரத்துச் சட்டங்கள் விதிமுறைகள் போன்றவற்றை பிரதேச காழி நீதவான்கள் பொலிஸ் நிலையங்கள் போன்றவற்றின் உதவியுடன் நடைமுறைப்படுத்த வேண்டும்.
- பெண்களை ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளை ஈடுபட வேண்டும் குறிப்பாக பெண்களின் இயலாமை, சமத்துவமற்ற தன்மை, சமூக அந்தஸ்த்து அதிகார வரம்பு போன்றவற்றில் பெண்களுக்கான தனியிடத்தை வழங்கவேண்டும் அவர்களுக்கான சமமான சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டும்.
- பெண்களது உரிமைகள், சுதந்திரமாக முடிவடுத்தல், சுதந்திர தெரிவுகளை வழங்குதல் போன்றவற்றின்மூலம் அவர்களுக்கான கல்வி, தொழில்வாய்ப்புக்கள் போன்றவற்றைப் பெற்று சமூக மேலாதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டும். பெண்களுக்கான அடிப்படை உரிமைகளைத் தெளிவுபடுத்தி சமூக பங்கேற்றம், சமூக நிகழ்வுகளில் தனக்கான இடம், கணவனால் கொடுக்கப்பட வேண்டிய உரிமைகள் போன்றவற்றை சமூக ரீதயாக வழங்க வேண்டும்
- பெண்களுக்கான நேரடியான உதவிகளை குறிப்பாக கல்வி, விழிப்புணர்வு, மதப்போதனை போன்றவற்றையும் பெண்களுக்காக இருக்கின்ற சட்டங்களை, கொள்கைகளை தெளிவுபடுத்த வேண்டும்
- குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படாத வகையில் கணவன் மனைவியிடையே பரஸ்பர ஒத்துழைப்பை பரிமாறிக் கொள்ள வேண்டும்
- முரண்பாட்டுக்குள்ளான, விவாகரத்துப்பெற்ற குடும்பங்களின் நலனினை அவதானிக்க, பராமரிக்க பிரதேச மட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல் வேண்டும்.
- இப்பிரதேச அமைப்புக்களை வலுவூட்ட வேண்டும்.
- பிள்ளைகளின் நலன் தொடர்பாக முறையான பொறிமுறையினை பெற்றோருக்கு ஊட்ட வேண்டும். எதிர்கால சந்ததியினரைப் பாதுகாப்பதற்காக அடிப்படைக்கல்வியை கட்டாயமாக ஊட்டி கல்வி மீதான ஆர்வத்தை பெற்றோர் பிள்ளைகள் மத்தியில் ஊட்ட வேண்டும்.

- ஆண்கள் தமது உணர்வு வெளிப்பாட்டின் விளைவுகள் தொடர்பாக விழிப்புணர்வினை பெண்ணிலை நோக்கில் பெற்றுக்கொடுக்க வேண்டும்
- பாலியல் நடத்தை, குடும்ப அந்தஸ்து, பிள்ளைகளின் நலன் போன்றவற்றில் பெற்றோர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.
- பெண்கள் உரிமைகள், சவால்கள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் சம்மந்தப்பட்ட பிரதேச ''காழி'', பொலிஸ் நிலையங்களுக்கு தெரிவித்து சட்டப்படியான தீர்வினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- பெண்களின் பாலியல் சமத்துவத்திற்கான அரசியல், குடியியல், குடும்ப, கல்வி, பயிற்சி, பொருளாதார செயற்பாடுகளுக்கும் நன்மைகளுக்குமான உரிமை, சுகாதாரம், போசாக்கு, சமூகப்பாரபட்சங்களில் இருந்து பாதுகாத்தல், பால்நிலைப்பாகுபாட்டினால் ஏற்படும் வன்முறைகளில் இருந்து பாதுகாத்தல் போன்ற பால்நிலை சமத்துவத்திற்கான உரிமைகளை நடைமுறைப்படுத்தல வேண்டும்.
- பெண்களுக்கான தகுதியினையும் , வகிபங்கினையும் அவரவர் சமயவழி முறையுனுடாக ஏற்படுத்த வேண்டும்
- பெண்கள் தொடர்பில் பொருத்தமான சட்டங்களை, கட்டளைகளை கிராமியமட்டமுதல் தேசிய மட்டம் வரை திட்டங்களை கொண்டுசெல்வதற்கான முன்மொழிவுகளை ஏற்படுத்த வேண்டும்.
- பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு மீண்டும் பாதிக்கப்படாத வகையில் பொருளாதார, வாழ்வாதார உதவிகளை நடைமுறைப்படுத்த வேண்டும்
- பால்நிலைரீதியான சமத்துவத்தை இப்பிரதேச மக்களிடையே ஊட்டவேண்டும். விவாதிக்கும் சமூக போக்கினை குறைத்து பெண்களும் இயல்பானவர்கள் அவர்களும் உரிமைகளை அனுபவிக்க தகுதியானவர்கள் என்பதை ஊட்ட வேண்டும்
- கருத்தியல் மற்றும் கலாச்சார ரீதியான ஆண் மேலாதிக்க பாகுபாட்டினை குறைக்கவேண்டும்.

**14.0 முடிவுரை**

இவ்வாறான விளக்கற்களின் அடிப்படையில் மலையடி கிராம பெண்கள் மேற்கூறிய வன்முறைகளை நோக்கிய வண்ணம் உள்ளனர். பெண்கள் ஆண்களுக்கு சமமானவர்கள் என்ற அடிப்படையில் பல்வேறு சட்ட ஏற்பாடுகள் கொண்டு வரப்பட்டாளும் மலையடி கிராம பகுதியில் விவாகரத்து, சீதனக் கொடுமை,மாமியார் கொடுமை, வறுமை,வேலை வாய்பின்மை போன்றவற்றினால் பெண்கள் சவால்களை எதிர்கொள்கின்றனர்.இதற்கு பிரதேச சமூக சேவை நிறுவணற்களின் பராமுகமும் மக்களின் விழிப்புணர்வின்மையும் அபிவிருத்தியின் சமமற்ற போக்கும் இன்னும் சிலவையும் காரணமாக குறிப்பிட முடியும்.ஆகவேதான் மேற்கூறிய விதப்புரைகள் கவனத்தில் எடுக்கப்பட்டு பெண்களுக்கு சமூகத்தில் சம அந்தஸ்த்து கொடுக்கப்பட வேண்டும்.

**நன்றியுரை**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத் துறையில் சிறப்புப் பட்டப்படிப்பை தொடரும் நாங்கள் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பிலும் இவ்வன்முறைகளிலிருந்து பெண்களின் உரிமைகளை மீளப்பெறுவதற்கான வழிவகைகளை விதந்துரைத்தல் தொடர்பிலும் சம்மாந்துறை மலையடி கிராமத்தை அடியாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வை மேற்கொள்ள வேண்டி உதவிய காழிக்கு மிக்க நன்றியை கூறிக்கொள்கின்றோம். இவ் ஆய்வை மேற்கொள்ள வேண்டி மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கென உதவிய கிராம உத்தியோகத்தருக்கும் நன்றியை கூறிக்கொள்கின்றோம். இது தவிர இவ் ஆய்வை மேற்கொள்ள வேண்டி அறிவுரைகள் தந்து உதவிய அரசியல் விஞ்ஞான விரிவுரையாளர்களுக்கும் மிக்க நன்றியை கூறிக்கொள்கின்றோம். இது தவிர மலையடி கிராம மக்களுக்கும் எமது நண்பர்களுக்கும் பெற்றோர்களுக்கும் மிக்க நன்றியை கூறிக்கொள்கின்றோம். இவ் ஆய்வில் அடங்கியுள்ள அனைத்து விடயங்களும் மக்களை மையமாகக் கொண்டு இடம்பெற்றவையே தவிர வேறு எத்தனிப்பட்டவர்களையும் பாதிப்பதில்லை.

**REFRENCES**


1. Straus, M. A. (1991). *Discipline and deviance: Physical punishment of children and violence and other crime in adulthood*. *Social Problems*. Vol.38, No.2, May, pp.133-154.
2. Haralambos and Heald. (1980) .*Sociology: Themes and Perspective*. Newdelhi. oxford university press. pp-140-171.
3. Shankar Rao C.N.(2008).*Sociology: Introduction of Social Thought*. Ramanagar. New Delhi. S.Chand & Company Ltd. P-190.
4. Daly, M. Wilson. (1988). *Homicide*. New York..
5. Resourse for combating violence against women (2009). Colombo, .centre for women research.p-51.
6. பிளேவியா அக்னீஸ்.(2005).*சட்டமும் பெண்களின் பாலியல் உரிமைகளும*.கோயம்புத்தூர். விடியல் பதிப்பகம், ப-17.
7. பஞ்சாங்கம்.க.(1994).*பெண்ணெனும் படைப்பு.* புதுச்சேரி.செல்வம் பதிப்பகம். ப- 16.
8. -சார்லட் பஞ்ச்.*பெண்கள் உரிமைகளை மனித உரிமைகளாக அங்கீகரித்தல்: மனித உரிமைகள் பற்றிய ஓர் மீள்பார்வையை நோக்கி.* கொழும்பு-15. சமூக விஞ்ஞானிகள் சங்கம். பப-06-22..
9. சரவணன், என், (2001)..*இலங்கை அரசியலில் பெண்களும் பெண்களின் அரசியலும் மூன்றாவது மனிதன், பதிப்பகம்* கொழும்பு .பக் 2-4
10. செலவராசு, சரஸ்வதி, இராஜேந்திரன.(2000). .*சமூகவியல் கொள்கைகள்.* அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
11. நிசார்.A.M. (2009*).பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்படல்: ஒரு* சமூக நோக்கு.*வீரகேசரி வார வெளியீடு* 29.03.2009, 05.04.2009, 12.04.2009, 19.04.2009 (ப-10).
12. இலங்கையின் ஜனநாயக சோசலிஷக் குடியரசின் பாராளுமன்றம் 2005ம் ஆண்டின் 34ம் இலக்க குடும்ப வன்முறை செயல் தடுப்புச் சட்டம், இலங்கை அரசாங்க அரசுத் தணைக்களம் பப-15-16
13. Rathika Kumaraswamy. (1999). *report of the special rapporteur on violence against women.its causes and consequences*.Colombo.
14. பெண் சஞ்சிகை (1999), மட்டக்கழப்பு, சூர்யா பெண்கள் அபிவிருத்தி அமைப்பு.
15. Article- 01of the declaration on the elimination of Violence against women.
16. மூலவள விபரத்திரட்டு. (2008). பிரதேச செயலகம், சம்மாந்துறை.
17. *காழி நீதிமன்ற நடைமுறைகளும் செயற்பாடுகளும்*, பப 28 – 29